விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 26 புதன்கிழமை (12.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## 3ஆவது முறையாகப் போட்டியிட

# முடியும்

## உச்ச நீதிமன்றம் அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லை என உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் சபாநாயகர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

## இந்.படையினர் இலங்கையில்

(கொழும்பு)

இந்திய இராணுவ போர்க் கல்லூரியின் உயர்கட்டளைப்பீட பணிப்பாளர் பிரிகேடியர் ஜே.எஸ்.சந்து தலைமையிலான 20 அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இக்குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை படைத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயா ரத்னாயக்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது, இந்திய இராணுவப் பயிற்சி மையங்களில் இலங்கை

20ஆம் பக்கம் பார்க்க....

## ரணில் இல்லாவிட்டால் சுனேத்திரா களத்தில்!

### வெளியானது தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாவிட்டால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரி - சுனேத்திரா பண்டாரநாயக்க அல்லது ரணில் விக்ரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்ரமசிங்க ஆகியோரில் ஒருவர் பொதுவேட்பாளராக போட்டியிடும் திட்டம் ஒன்றும் வெளியாகியுள்ளது.

கொழும்பு பீச்வெலி விருந்தகத்தில் இடம்பெற்ற இரவு விருந்துபசாரம் ஒன்றின போது இது தொடர்பான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இரண்டு பெண்களும் பொது வேட்பாளர் நிலைக்கு பொருத்தமானவரகளாக இருபரென இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

19ஆம் பக்கம் பார்க்க....

## பிரதி அமைச்சரின் மீது இந்தியா குற்றச்சாட்டு!

(கொழும்பு)

புனர்வாழ்வு பிரதி அமைச்சர் கருணா அம்மான் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் மன்னிப்பு கோர வேண்டுமென இந்திய அமைதி காக்கும் படையின் முன்னாள் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கேணல் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அங்கம் வகித்த காலத்தில் கருணா இழைத்த குற்றச் செயல்களுக்காக அவர் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் மன்னிப்பு கோர வேண்டுமென தெரிவித்துள்ளார்.

1987 முதல் 1990-ம் ஆண்டு வரையில் இந்திய அமைதி காக்கும படையின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளராக ஹரிஹரன் கடமையாற்றியுள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

## டிப்பர் வாகனம் மோதி யுவதி உயிரிழப்பு



வீதியை கடக்க முற்பட்ட யுவதிகளை டிப்பர் வாகனம் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு யுவதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9.50 மணியளவில் ஏ9 வீதியில் 246 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

19ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர்கள் மேன்முறையீடு

(கொழும்பு)

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து இந்திய மீனவர்கள், தங்களுக்கெதிரான தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மேன்முறையீட்டு மனுக்களை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக அந்த மீனவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வழக்கறிஞர் அணில் சில்வா தெரிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலில் பொது பல சேனா

(கொழும்பு)

ஆளுந்தரப்போ இல்லை எதிர்த்தரப்போ தமது நிபந்தனைகளுக்கு உடன்பட மறுக்கும் பட்சத்தில் தமது அமைப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனி வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் என பொது பல சேனா அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவ்வமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் இதனைக் தெரிவித்தார்.


இங்கே, ஜனாதிபதி மகிந்த

20ஆம் பக்கம் பார்க்க....

O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கி.மாகாண கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## மனித உரிமை ஆணையாளருடன் இலங்கை ஒத்துழைக்க வேண்டும்

### பான் கீ மூன் வேண்டுகோள்



(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதவுரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து விசாரிக்கும் ஐ.நா விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை அச்சுறுத்தி, விசாரணைகளை சீர்குலைக்க அரசாங்கம் முயன்று வருவதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் கடந்த வாரம் குற்றம் சுமத்தியிருந்தார்

20ஆம் பக்கம் பார்க்க....

## யானையில் பொதுவேட்பாளர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளர் ஐககிய தேசிய கட்சியின் யானை சின்னத்திலேயே களமிறங்க வேண்டு மென்பதில் ஐ.தே.க உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மாதுளுவாவே சோபித தேரர், ரணில் விக்ரமசிங்க, கரு ஜெயசூரிய, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரின் பெயர்கள் பொது வேட்பாளர் தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, இறுதி முடிவு எட்டப்படாத நிலையில், சஜித்

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகா ஆதரவாளர் அரசுடன் இணைவு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆளுந்தரப்புடன் இணையவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம், அக்கட்சியைச் சேர்ந்த தென், வடமேல், மேல் மாகாண சபையின் உறுப்பினர்கள் மூவரும், கட்சியின் பிக்கு சம்மேளன செயலாளரான தேரர் ஒருவரும் ஆளும் ஐக்கிய முன்னணியுடன் இணையவுள்ளதாகத் தெரியவருகின்றது. (எ-11)


## ஆழ்ந்த துயருறுகின்றோம்



10.11.2014 அன்று சிவபதமடைந்த
எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.வீ.விஜயகுமார் அவர்களின் தந்தை

அமரர்
### செல்லத்துரை வீரபத்திரர்

மண்ணுலகில் 28.04.1948
விண்ணுலகில் 09.11.2014

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரிச் சமூகம்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

(8302)


# பத்து மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

நாட்டில் பத்து மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் நிலவுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதாக கட்டட ஆராய்ச்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆசிரு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் பல பாடசாலைகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டியில் 19 பாடசாலைகளின் நிலைமை மிக மோசமாக காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை. களுத்துறை, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட பத்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம் காணப்படுகிறது.

இதற்கமைய நுவரெலியா மாவட்டத்தில் 254 இடங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பதுளையில் 487 குடும்பங்கள், நுவரெலியாவில் 450 குடும்பங்கள் பாதிப்படைவதற்கான சாத்தியக் கூறும் தென்படுகின்றது.

அத்தோடு கண்டியில் 19 பாடசாலைகளில் மண்சரிவு ஏற்படும் சாத்தியக் கூறு தென்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (எ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
### சரோஜினிதேவி நாகராசா

M.Phil (ஏழாலை மேற்கு, ஏழாலை)

11.11.2014 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் **கல்வியியல் முதுதத்துவமாணிப் (M.Phil)** பட்டத்தினைப் பெற்ற ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சரோஜினிதேவி நாகராசா அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு மேலும் உயர்வு பெற்று அவரது பணிகள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அமீர், பத்மா, கமலா, சோதி, வாமதேவன், அம்பி, குடும்பத்தினர்

(8299)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
### ஜீவிதா சுகர்ணன்

நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 30-வது பட்டமளிப்பு விழாவில் பொருளியலில் சிறப்புக் கலைமாணி (BA.Hons) பட்டம் பெற்ற திருமதி ஜீவிதா சுகர்ணன் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று எல்லாம் வளமும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :**
மாமா– சந்திரலிங்கம், மாமி – சுசிலாதேவி, மைத்துனர்கள் – சுகிர்தன் (வட மாகாணசபை உறுப்பினர் வடக்கு மாகாணம்), சுவர்ணன், சுகேசன், சுதந்திரன், சகோதரிகள் – நிவேதா, ஜீவாஜினி, பெறாமகள் – சன்விகா

(8301)



## கண்ணீர்க் கவிதாஞ்சலி

தோற்றம் 01 - 04 - 1939



மறைவு 09 - 11 - 2014

### அமரர் முத்தையா திருநாவுக்கரசு

(முன்னாள் நீதிவான், மாவட்ட நீதிபதி - சிரேஷ்ட சட்டத்தரணி, தலைவர் - யாழ்ப்பாண மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம்)

நேர்மையும் நெஞ்சுரமும், வஞ்சமிலாப் பெருமனமும்
செந்தமிழில் சொல்வளமும், ஆற்றுநடை ஆங்கிலமும்
கைவந்த கவிதையுடன் வலம் வந்த நகைச்சுவையும்
சட்ட அறிவோடு சமூகச் சிந்தனையும்
நீதிவானாக நிமிர்ந்த நேர்வாழ்வும்
வயோதிபத்தின் வாசலிலும் வனப்பான வசீகரமும்...
அத்தனையும் ஓர் கவிதை! அழகான தமிழ்க் கவிதை!!
நாவுக்கு அரசானாய்! நம் மண்ணின் "திரு" மகனே!!
நனையும் விழிகளுடன் நமது அஞ்சலிகள்!!!

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள்

(8[illegible])



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
### முத்தையா திருநாவுக்கரசு

"விகடகவி" (ஓய்வுபெற்ற நீதிபதி)




முல்லை நீதிமன்றில்
தோன்றி முதல்வனென
புரிய வைத்து
இளையோர்க்கு
வழிகாட்டி நல்லுரை
பகர்ந்து நண்பனாய்
ஆசிரியனாய்
இருப்பாய் என
எண்ணியிருந்தவேளை
காலதேவன் எம்மை
ஏமாற்றி விட்டான்
கலங்குகிறோம் இன்று
நல்ல பணி செய்தாய்
எம் மனங்களில்
நீடூழி நீ வாழ்வாய்!!!

மாவட்ட நீதிபதி, முல்லைத்தீவு,
சட்டத்தரணிகள் சங்கம், முல்லைத்தீவு,
பதிவாளர், நீதிமன்ற உத்தியோகத்தர்கள்
மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு.

(எ-9040)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. சின்னையா சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுந்தரலிங்கம் நேற்று 11.11.2014 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கனகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சரஸ்வதியின் அன்பு மருமகனும் வில்வராணியின் பாசமிகு கணவரும் சசிக்குமார்(விவசாய திணைக்களம் திருநெல்வேலி),சஞ்சீவ்குமார் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுஷாவின் பாசமிகு மாமனாரும் நிசானா, ஸகானா ஆகியோரின் பேரனும் அமரர் தர்மலிங்கம் தனலக்ஷமி (பிரான்ஸ்), யோகலிங்கம்,விஸ்வலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் அமரர் ஜம்பு கேஸ்வரன், குணாளன், அமரர் அம்பிகாவலன், ஞானேஸ்வரி (பிரான்ஸ்), ஞானச்சந்திரன் (சுவிஸ்), கிருபாகரன்(ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார். ரஞ்சன் (நோர்வே),குமார் (லண்டன்), ராஜி(கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12.11.2014 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

வரியப்புலம்,
சுன்னாகம்.

(8295)

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.


## யாழ்ப்பாணத்தில் 10-01-2015ல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

*"IELTS Registration Centre for British Council"*




* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

கடந்த 28 மே 2014ல் Colombo Cinnamon Lakeside Hotel ல் நடைபெற்ற சிறந்த IELTS நிலையங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் நாட்டின் சிறந்த நிலையம் என எமது கல்லூரி தெரிவு செய்யப்பட்டு எமக்கு விருதினையும் வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளனர்.



* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

**Courses Conducted by University Lecturers**

**வகுப்புக்கள் 15–11–2014 இல் ஆரம்பமாகும்**

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 7.30-10.00, 5.00 - 7.00 |

கடந்த 10 வருடங்களாக No.143-Adiyapatham Road Thirunrlveli. யில் பணியாற்றி இப்போது No.#192 Navalar road இல் பணியாற்றுகின்றோம்.

**BRITISH COLLEGE OF ENGLISH**

No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887


# மரண அறிவித்தல்

## அமரர் தங்கவேலு காந்தமலர்



புலோலி வட கிழக்கு சந்தாதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலு காந்தமலர் அவர்கள் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முத்துதங்கவேலுவின் அன்பு மனைவியும் அமரர்களான அண்ணாவி கந்தையா- அன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் அமரர்களான முத்து-பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் மற்றும் நாகேந்திரனின் அருமைச் சகோதரியும் விஜயகலா, விஜயதாசன் (கனடா), சதீஸ்குமார் (கனடா), சுகந்தி (கனடா), விஜயலதா (நோர்வே), அமரர் சாந்தி மற்றும் ஸ்ரீநிவாசன் (நோர்வே), சுகன்யா (இந்தியா) ஆகியோரது அன்புத் தாயாரும் நாகேந்திரன்- பிங்கலாதேவியின் பாசமிகு மைத்துனியும் அமரர் புஸ்பராசா மற்றும் அன்ரனி தவராசா (பாப்பா), அலங்கீஸ் (கனடா), ரவி (இந்தியா), வாகினி (கனடா), ராதிகா, ரதிக்கா, ரதீஸ், ரந்தீஸ் ஆகியோரது அருமை மாமியாரும் பிரசன்னா, ஜெனாத், இலக்கியா, அனஜா, அனுசாந், டிலக்ஸன், விசாலி, றக்ஸனா, டிலக்ஸனா, அபிராஜ், அகில், ஆன்ரியன் ஆகியோரது அன்புப் பேர்த்தியும் ஐஸ்வர்யா, ஆகாஸ், சர்மி, லிபின்சூரியா ஆகியோரது பாசமிகு பூட்டியும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சந்தா தோட்டம், புலோலி வடகிழக்கு,
புலோலி.
தொ.பே.இல.021 320 5571

(8300)

தகவல்:-
மு.தங்கவேலு (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
# VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
# CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2015* *Date: 27.10.2014*

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்
## 2015-ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டும் இடம் என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015-ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை. (மீன் வெட்டுமிடம். மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 9020000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 199500.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 1800700.00 | |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 245000.00 | |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 43670.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 60500.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 253000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 242000.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 63800.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 40700.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 16117860.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 81950.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 500.00 | 1000.00 | 15500.00 | |
| 4 | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 19250.00 | |
| 5 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 184800.00 | |
| 6 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 50000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 169400.00 | |

1. கேள்வி பத்திரம் வழங்கும் காலம் - 28.10.2014 - 10.11.2014 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் - 11.11.2014 நண்பகல் 12.00 மணிவரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் - 11.11.2014 பி.ப. 2.00 மணிக்கு
4. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு **12 %** பெறுமதி சேர் வரியும் **2 %** தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2014.12.05-ம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2014.12.05-ம திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
9. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் **4 %** இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
10. இறைச்சிக்காக கன்று ஈனக் கூடிய பசுக்களையோ, மறியாடுகளையோ அறுப்பது தடை செய்யப்படும். எனினும் கன்று ஈன முடியாத பிரயோசனமற்றது என மிருக வைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு, ஆடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.
11. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவித்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தில்காணி உரிமையாளர்களின்சம்மதக் கடிதம் இணைக்கப்படுதல் வேண்டும்.
14. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
15. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
16 கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தி.பிரகாஷ், தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C-9045)

## கேள்வி அறிவித்தல் - 2015 கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2015 தொடக்கம் 31.12.2015 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்வி பத்திரம் வழங்கும் காலம் : அலுவலக நாட்களில் மு.ப 8.30-பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 13.11.2014 இருந்து 24.11.2014 பி.ப 3.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 25.11.2014 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 25.11.2014 மு.ப 10.30 மணி வரை
கேள்வி திறக்கும் இடம் : கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலை யில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் அதன் நிழல்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் சகலவிதமான கொள்வனவுக்கான சந்தை வரி **3 %** ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | சேவைச் சந்தை – கிளிநொச்சி | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன் | 20,000.00 | 1,000.00 | 1,916,250.00 |
| 2. | தராசுக்கொட்டகை-மரக்கறி | 40,000.00 | 1,000.00 | 2190,000.00 |
| 3. | தராசுக்கொட்டகை-பழம் | 10,000.00 | 1,000.00 | 383,250.00 |
| 4. | மாட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 1,000.00 | 2190,000.00 |
| 5. | இல.1-கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1562,000.00 |
| 6. | இல.2 கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1430,000.00 |
| 7. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 342,100.00 |
| 8. | துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 20,000.00 | 1,000.00 | 1650,000.00 |
| 9. | தேங்காய் | 10,000.00 | 1,000.00 | 1095,000.00 |
| 10. | கருவாடு.முட்டை | 10,000.00 | 1,000.00 | 273,750.00 |
| 11. | உயிர் இறைச்சிக்கோழி | 10,000.00 | 1,000.00 | 480,000.00 |
| 12. | வெற்றிலை.பாக்கு.புகையிலை.இஞ்சி | 10,000.00 | 1,000.00 | 547,500.00 |
| | சேவைச் சந்தை – ஸ்கந்தபுரம் | | | |
| 1.. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை.பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 383,250.00 |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 380,000.00 |
| 4. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| | சேவைச் சந்தை – தர்மபுரம் | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை.பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 383,250.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 477,000.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 98,000.00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| | கல்லாறு | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 150,000.00 |
| | சேவைச் சந்தை – இரணைமடு | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை.பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 383,250.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 1,215,110.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 602,000.00 |
| | சேவைச் சந்தை – உருத்திரபுரம் | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை.பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 109,500.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (D/10) | 10,000.00 | 1,000.00 | 230,000.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை (D/8) | 10,000.00 | 1,000.00 | 310,000.00 |
| 4. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 140,000.00 |

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்படிவக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | சேவைச் சந்தை – பரந்தன் | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10.000.00 | 1,000.00 | 383,250.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 650,000.00 |
| 3. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 222,100.00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 100,500.00 |
| | சேவைச் சந்தை – வட்டக்கச்சி | | | |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை.பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 383,250.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 578,700.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 375,250.00 |
| 4. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| 5. | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| | ஜெயந்திநகர் | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 210,000.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| | ஊற்றுப்புலம் | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 150,000.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| | வன்னேரி | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| | ஆனைவிழுந்தான் | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| | கண்டாவளை | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 134,500.00 |
| | புன்னைநீராவி | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 260,000.00 |
| | முரசுமோட்டை | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 244,800.00 |
| 2. | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| 1. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை.பாக்கு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 109,500.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை (D/10) | 10,000.00 | 1,000.00 | 230,000.00 |
| 3. | மாட்டிறைச்சிக்கடை (D/8) | 10,000.00 | 1,000.00 | 310,000.00 |
| | அக்கராயன் | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| | [illegible]மடு | | | |
| 1. | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |

### நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்.

3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

4. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

5. மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திலிங்கம் குகராசா,
தவிசாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C-9044)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



**அமரர் முத்தையா திருநாவுக்கரசு**

சென்ற 02.08.2014 அன்று எமது வித்தியாலய முத்தமிழ் மன்றத்தினால் நடத்தப் பட்ட முத்தமிழ் விழாவில் முதன்மை விருந் தினராகக் கலந்து சிறப்பித்து அரும்பெரும் கருத்துக்களை தனது அமுதத் தமிழில் வைத்து நின்ற யாழ். மாவட்ட முன்னாள் நீதிபதியும் விகடகவியும் ஆகிய **உயர்திரு. மு. திருநாவுக்கரசு** ஐயா அவர்கள் அமரத் துவமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந் தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றி ருக்கும் அவர் தம் குடும்பத்தினரோடு இணைந்து நாமும் துயர்பகிர்கின்றோம்.

(சி-9036)

**முத்தமிழ் கலா மன்றம்,**
**யா/ இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி.**

# பாலத்தை புனரமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுப்பு

(தும்பளை)

பருத்தித்துறை மருதங்கேணி நெடுஞ்சாலையின் குடத்தனை ஆறாம் கட்டை சந்தி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள பாலம் மிகவும் சேதமடைந்து காணப்படுவதாக அப்பிரதேச மக்களால் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பாலமானது அண்மைக்காலமாக சேதமடைந்து காணப்படுவதால் அப்பாலத்தினூடாக போக்குவர த்தினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாலத்தினூடாக தினமும் சென்று வருகின்ற கனரக வாகனங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செல்ல வேண் டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான பாதையில் காணப்படுகின்ற குறித்த பாலமானது கவனிப்பாறின்றி சேதமடைந்து காணப்படுகின்றது.


இப்பாலம் தொடர்பாக மக்களால் உரிய தரப்பினரிடம் பலமுறை முறையிடப்பட்டும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை.

தினமும் கனரக வாகனங்கள் இப்பாலத்தினூடாக செல்வதால் இப்பாலமானது முற்றிலும் சேதமடைந்து விடக் கூடியசந்தர்ப்பம் உருவாகக்கூடும்.

பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணிக்கு செல்லும் ஒரேயொரு பிரதான பாதையாக காணப்படும் குறித்த பாலத்தினை உரிய அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே கவனிப்பாரின்றி காணப்படும் குறித்த பாலத்தினை சீரான முறையில் புனரமைத்துத்தருமாறு அப்பகுதி மக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-7-19)

# சேவைநலன் பாராட்டு



யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை, பருத்தித்துறை

**திரு. கந்தசாமி நித்தியானந்தன்**

(S.L.T.S.-I, S.L.P.S.2-II), B.Sc (B.Ad) Hons Dip.in Ed,MEd.)

எமது பாடசாலையில் 8 வருடங்கள் அதிபராக சிறந்த சேவையாற்றி மாணவர்களின் கல்வி இணைபாட விதமான செயற்பாடுகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தி தற்போது யா/ வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அதிபராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள திரு.க.நித்தியானந்தன் அவர்களை மனம் மகிழ பாராட்டி வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல பட்டங்களையும் பதவியுயர் வுகளையும் பெற்று நீடூழி வாழ்ந்து கல்விச் சேவையாற்ற எல்லாம்வல்ல இறை அருளை வேண்டுகின்றோம்.

(8286)

**பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம்,**
**யா/ புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை, பருத்தித்துறை.**

## பட்ஜெட் பார்வைக்கு

பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக வலி. கிழக்கு பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் நேற்றைய தினம் தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை வரை வைக்கப்படும் என வலி கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் கணபதிப்பிள்ளை துரைசிங்கம் அறிவித்துள்ளார். (இ-5)

# வாழ்த்தி வணங்குகின்றோம்



அகவை எண்பதை நிறைவு செய்யும்
வணக்கத்திற்குரிய அந்தண சிரேஷ்டர்
**சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள்**
**ஸ்ரீமதி சீதாலஷ்மி அம்மா**
தம்பதிகளை இந் நன்நாளில் வாழ்த்தி
வணங்குகின்றோம்.

**வலம்புரி நிர்வாகம்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. பாலகிருஷ்ணன் செல்வகுமார்**



பேராதனை பல்கலைக்கழகத்தின் 29.09.2014 அன்று கலைமாணி (B.A) பட்டத்தினை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H.) பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

(8271)

**வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**கிளி/ புன்னைநீராவி அ.த.க.பாடசாலை.**

# இராசி பலன்

12.11.2014
(ஐப்பசி 26, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு சஷ்டி முழுவதும்
புனர்பூசம் முன்னிரவு 9.07 மணி வரை
இராகுகாலம் 12.06-01.36 மணிவரை
சுபநேரம் 4.36-6.06 மணிவரை

**வளவன்**

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், புதிய கூட்டாளிகளை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், வழி பாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கடகம்:** அன்றாடப்பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப் புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்.

**சிம்மம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உன்னதமான வாழ் வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலை மேம்படும்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணி களை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், உறவினர்களின் உதவி கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உறவினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தேகநலனில் முன்னேற்றம் ஏற்படும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, மாலை நேரம் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெற லாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டு வீர்கள், பித்த சம்பந்தமான ரோகம் ஏற்படலாம்.

**மீனம்:** மனதில் இனம்புரியாத சிந்தனை கள் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள், பேச்சில் கனிவு பிறக் கும், உங்களின் முன்னேற்றத்தி ற்கு உதவியவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்திலும் பொதுவாழ்விலும் நாவுக்கு அரசனாகவே வாழ்ந்தவர்

## மாவட்ட நீதிபதி கணேசராஜா அனுதாபச் செய்தியில் தெரிவிப்பு

ஆன்மீக வாதியாக வாழ்ந்த திருநாவுக்கரசு ஐயாவை நாவுக்கு அரசனாகவே நீதிமன்றிலும்,பொது வாழ்விலும் கண்டிருக்கிறேன் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித் துள்ளார்.அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தி யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிஜ வாழ்க்கையில் நல்ல மனிதர்களை புரிந்து கொள்வது மிகவும் கடினம். நல்லதுக்கு காலமில்லை என்று சொல்வார்கள். எல்லாம் நன்மைக்கே என்று ஆன்மீக வாதியாக வாழ்ந்த மனிதர் திருநாவுக்கரசு ஐயா.



நாவுக்கு அரசனாகவே நான் நீதிமன்றிலும், பொதுவாழ்விலும் அவரைக் கண்டிருக்கின்றேன். நீதி பிழைத்தால் அது யாரென்று பாராமல் தட்டிக் கேட்கும் குணமும், நல்ல விடயங்களை மனம் திறந்து பாராட்டும் பண்பும், குற்றங்களை கடியும் குணமும் திருநாவுக்கரசு ஐயாவிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்ததை நான் கண்டேன்.

நறுக்கென்று பதில் சொல்லும் புத்திசாலித்தனமும், நீதிபதிகளை புரிந்து கொண்டு வழக்காடும் விவேகமும், மக்களின் உணர்வுகளை மதிக்கும் பண்பும் அவருக்கே உரித்தான பண்புகள்.

வற்றவற்றக்குறையாத சொல்வளமும், நகைச்சுவையும் திருநாவுக்கரசு ஐயாவிடம் நான் கண்டளவிற்கு வேறு எந்த சட்டத்தரணியிடமும் நான் கண்டதில்லை.

சிரிக்க வைக்க வேண்டும் மகிழ வைக்க வேண்டும் என விரும்புகின்ற மனம் எல்லோரிடமும் வருவதில்லை. திருநாவுக்கரசு ஐயாவிடம் இயல்பாகவே அவ்வியல்பு குடிகொண்டிருந்தது.

அவருடைய புத்திரர்கள் மூவரும் தமது துறையிலே சிறப்பாகப் பணியாற்றி தன்னிகரற்ற சேவையை மக்களிற்கு வழங்கி கொண்டிருக்கின்றார்கள்.

கணபதி பக்தனான நாவுக்கரசு சாத்திரம் சொல்வதிலும் வல்லவர். ஒவ்வொரு வியாழன்றும் கணபதிக்கு விரதமிருந்து வாருங்கள ஒரு குறையும் வராது எனக் கூறி என்னை ஒவ்வொரு வியாழனும் விரதமிருக்க வைத்தவர் நாவுக்கரசு.சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாயிருந்து பிரியாவிடை பெற்றுச் செல்கின்ற போது எனக்கு புகழ்மாலை சூட்டியவர் சொல்வேந்தன் நாவுக்கரசர்.

உலகம் ஆயிரம் சொன்னாலும் தனக்கென்று தனிப்பாதை வகுத்து கம்பீரமாய் நடந்த நாவுக்கரசனுக்கு எனது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றேன். என்று அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)


பூமணி நவாலியூர்க்கவிராயரின் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை யாழ் வண்ணைக்கலைவாணர் நாடக மன்றத்தின் ஸ்தாபகர் கலாபூசணம் இராசையா பீதாம்பரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேசசெயலரும் கலாசார பேரவைத் தலைவருமாகிய பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் தலைவர் கலைமாமணி கிறகிரி கிறிஸ்தோப்பரும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட சிகை அலங்கார ஒப்பனை கூட்டுறவு சங்கங்களின் ஒன்றிய உப தலைவர் கிருஷ்ணபிள்ளை இரத்தினராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது வரவேற்புரையினை நல்லூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி. கு.ரஜனி நிகழ்த்துவதுடன் நூல் வெளியீட்டுரையினை தாயகம் பிரதம ஆசிரியர் க.தணிகாசலமும், ஆய் வுரைகளை பருத்தித்துறை பிரதேச செயலாளர் கவிஞர் த.ஜெயசீலனும்வழங்கவுள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 190

வினோசன் பரமானந்தம்




துஷா துஷா





சக்தி வேல்





ரத்தினசபாபதி பாலராஜா




அற்புதராஜா முகேஷ்ராம்




ரத்தினசபாபதி பாலராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Association for Health and Counselling "Shanthiham"
## Registration of Suppliers for goods and services for the year 2015

Applications are invited from reputed suppliers, manufactures, Importing Agents, other business Organizations and Contractors who wish to register themselves with the Association for health and Counselling "Shanthiham" for supply of goods and services listed below for the year 2015.

**CONDITIONS**

i.Applicants should pay Rs.500/- as registration fee by way of Cash or Bank draft and obtain application forms during office hours from Finance branch.

ii.Separate application should be forwarded for each category.

iii.Completed Application forms should be forwarded under registered cover or by hand to the following address on or before 4.00 P.M 20.12.2014 and marked on left hand corner of the envelop as "Registration of Suppliers-2015"

iv.Quotation for supply of goods and services will normally be called from the list of registered Suppliers, However the ACH-Shanthiham reserves the right to invite quotations from non registered suppliers also if necessary.

v.The AHC-Shanthiham reserves the right to accept or reject any application sent for registration.

vi.Application forms could be obtained on or before 4.00 PM 19.12.2014.

| Supplies | Services |
|---|---|
| 1.All kinds of stationery items | 1.Repair and maintenance of office equipments |
| 2.Computers, servers, Printers ,UPS, scanner etc; etc; | 2.Repair and servicing Computers,UPS,Printers etc: |
| 3.Office equipments Fax Machine, photo copier etc: | 3.Repair and maintenance of Office Building |
| 4.Training equipments Multimedia, Overhead projector ,Digital video camera etc: | 4.Servicing and repair of Electronic items Camera etc. |
| 5.Office furniture Timber/steel | 5.Repair and maintenance of steel furniture's |
| 6.Motor vehicle Spares, Tyres&Tubes batteries etc | 6.Repair and servicing of Motor vehicles Vans ,Motor Bicycles etc; |
| 7.Electrical & electronic items | 7.Repair and maintenance of power lines and other electrical installations |
| 8.Zanitorial items Harpic,teepol & liquids | 8.zanitorial services |
| 9.Computer stationeries Toner, Pendrives, cartridges | 9.Printing work |
| 10. Water bottles | 10.Security services |
| 11.Food items Lunch ,Short eats etc: | 11. Plumbing works & plumbing items |

**Executive Director**

**AHC-Shanthiham**

**Address:-**
**Association for health and Counselling" Shanthiham**
**8,8/1, katpagavinayagar lane,**
**Off Kachcheri Nallur Road, Jaffna**


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நுணா/ மஞ்ச நீராட்டி

Botanical Name: Morinda tinctoria
Family- Rubiaceae
Engl-Indian Mulberry
Sinh-Ahu

நடுத்தர மர வகுப்பை சார்ந்தது. அடிமரம் மங்கிய மஞ்சள் நிறமாகவும் மரப்பட்டை சாம்பல் கலந்த மஞ்சள் நிறமாகவும் ஆழ மான வெட்டுக்களை உடையதாகவும் வெளிப்புறம் கரடுமுரடாகவும் உட்புறம் மென்மையாகவும் காணப்படும். இலைகள் சுமார் 4, 5 அங்குல நீளமும் 2 அங்குல அகலமுமுடைய நீள்வட்ட வேலுருவாகக் காணப்படும். இலைக்காம்பு 1.3-2.5 செ.மீ. நீளமுடையது. பூக்கள் வெள்ளைநிறமாகவும் 5 இதழ்களையுடையதாகவும் காணப்படும். காய் உருண்டையாகவும் பசுமை நிறத்துடனும் அதில் பல சிறுகுழி போன்றமைந்திருக்கும். நுனிக்காய் பழுத்ததும் கருமை நிறமாகி காற்றடித்தால் கீழே விழுந்து நசுங்கும். பழம் இனிப்பாக இருக்கும்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

நகரங்கள், கிராமங்கள் எங்கும் தன்னிச்சையாக வளரக் கூடியது.

**மருத்துவப் பயன்கள்**

மஞ்ச நீராட்டி என்பது நாளடைவில் மஞ்சனாட்டி என்பதாகவும் பின்பு மஞ்சனாத்தி என்று மருவியிருக்கலாம். பண்டைய காலத்தில் இரசாயன கலர் உற்பத்தியில்லாத போது இதன் பட்டைகளில் சாயம் எடுத்து துணிகளுக்கு கலர் போடுவது வழக்கமாக இருந்தது. இந்த மஞ்சனாத்திக்கு நம் நாட்டு வழக்கப் பெயர் நுணு என்பதாகும்.



நல்லசுவையான நுணா இலையை இடித்து ஒரு பங்கு உத்தாமணி இலைச்சாறு, நொச்சியிலைச்சாறு, பொடுதலைச்சாறு ஆகிய மூன்றும் ஒரு பங்கு சேர்த்து யாவும் ஒன்றாக கலக்கி 6 மாதக் குழந்தைக்கு வேளை ஒன்றுக்கு 40-60 துளிகள் ஒரு வயதிற்கு மேற்பட்ட குழந்தைக்கு 2 தேக்கரண்டியளவு 3 நாட்களுக்கு கொடுத்து வர வந்தரோகம் தீரும்.

நுணா, உத்தாமணி, நொச்சி, பொடுதலை நான்கும் சம அளவில் சேர்த்து சட்டியில் போட்டு வறுத்து பொடித்துக் கொள்ளவும். மிளகு, சுக்கு, சீரகம், ஓமம், பெருங்காயம் வகைக்கு 10 கிராம் எடுத்து எண்ணெய் விட்டு வறுத்து பொடி செய்க. இரண்டையும் 2:1 பங்காக சேர்த்து கலந்து 2 கிராம் அளவு வெந்நீரில் கலந்து கொடுக்க குழந்தைகளுக்கு ஏற்படும் சுரம் குணமாகும்.

**வெண்குஷ்டத்திற்கு:** நுணா இலை துளிர், பழுத்தது சம அளவில் சேர்த்து மைபோல அரைத்து 1/4 கிலோ எடுத்து 30 கிராம் காட்டுச்சீரகம் அரைத்து இத்துடன் சேர்த்து இரும்பு வானலியில் ஒரு கிலோ எள் நெய் விட்டு அதில் அரைத்த கல்கத்தைப்போட்டுக் காய்ச்சவும். மெழுகுப் பதம் வந்ததும் கலக்கத்தை தனியே எடுத்து வைக்கவும். இதனை நாளும் காலை மாலை 5 கிராம் அளவு சாப்பிடவும். வடித்த எண்ணெயை வெண்புள்ளியில் தடவிவரவும். இவ்வாறு 6-8 மாதங்கள் வரை பயன்படுத்திவர வெண்குஷ்டம் குறைவடையும்.

**நுணுக்காய்:** நுணுக்காய் பற்களை பாதுகாக்கக்கூடியது. பல் சொத்தை விழுதல், பல்வலி எவ்வளவு கஷ்டமானதும் சரி செய்யும். இதற்குவேண்டியளவு நுணுக்காயை சுத்தமாகத் துடைத்து உரலில் போட்டு நன்றாக இடித்து ஆட்டி அதனுடன் கறியுப்பு சேர்த்து அடை தட்டி உலர்ந்ததும் ஒரு மண்சட்டி யில் அடைத்து வைத்து வாய்பருத்த மேற்சட்டியினால் மூடி சீலை மண் செய்து உலர்ந்த பின் 15 வறட்டியில் எரித்து ஆறிய பின் சட்டியைப் பிரித்து அடையை எடுத்து பின் அம்மியில் பட்டுப் போல அரைத்து புட்டியில் பத்திரப்படுத்தவும். தேவையானபோது மேற்படி பொடியால் பல் துலக்கி வர பற்கள் சம்பந்தமான நோய்கள் தீரும்.

**நுணுபட்டைத் தைலம்:** முற்றிய நுணா மரப்பட்டை ஒரு கிலோ நிறுத்துவைத்துநன்றாகஇடித்துஅதில் 6 லீற்றர் தண்ணீர் விட்டு 2 லீற்றர் ஆகும்வரை சுண்டக்காய்ச்சி நீரை மட்டும்எடுத்துஅதனுடன்1500மில்லி நல்லெண்ணெய், 500 மில்லி எலுமிச்சம்பழச்சாறு, 500 மில்லி இளநீர் இவைகள் யாவும் ஒன்றாகக் கலக்கி மறுபடியும் சிறுதீயில் மேற்படி சாறு சுண்டி எண்ணெய்யாகும் வரையில் காய்ச்சி எடுத்துக்கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்யலாம். இதனால் தோல் வியாதிகளான கிரந்தி, கரப்பான், சிரங்கு, வியர்க்குரு கட்டிகள் முதலிய வியாதிகளைப் போக்கும்.

காவிக்கலர் சாயத் துணிகளை தோய்க்க இதன் முற்றிய மஞ்சள் நிறமான பட்டைகளை வெட்டி உலர்த்தி எடுத்தபின் வெந்நீரில் ஊற வைத்தால்அதில்மஞ்சள்நிறச்சாயம் இறங்கும். அதில் வெள்ளை நிறத் துணிகளை அழுக்கின்றி தோய்த்துலர்த்தினால் சிவப்பு, மஞ்சள் நிறமான கலர் ஏறும். இதனை அணிவதால் சிற்சில உளநோய்கள் தீருவதாகத் தெரிகிறது.

**வேர்:** மலச்சிக்கலுக்கு நுணா மர வேர் 10 கிராம் எடுத்து கழுவி இடித்து 200 மில்லி நீர் விட்டு 50 மில்லி ஆக வடித்து 30 மில்லி மாலை யில் எடுக்க அடுத்த நாள் காலை மலம் இளகி வெளியேறும். துணிகளுக்கு இம்மரப்பட்டை மஞ்சள் நிறம் கொள்ளவும் கிருமி நீக்கவும் பயன்படுத்தினார்கள். மஞ்சநீராட்டு என்ற பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். காலப் போக்கில்மஞ்சணாத்தியாகமாறியது நுண்ணாமரம்.


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- கிழக்கு மாகாணம்

**தமிழ்மொழியும் இலக்கியமும்** **ஒரு மணித்தியாலம்**

**பகுதி I**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. வெள்ளத்தால் அழியாதது வெந்தழலால் வேகாதது **'தழல்'** என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
 1. விறகு 2. நெருப்பு 3. வெப்பம் 4. நீர்

02. 'அரசிளங்குமரன் வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால் அலக்கணுற்றான்' **'வேங்கையும் வேழமும்'** முறையே.
 1. யானையும், புலியும் 2. புலியும், சிங்கமும்
 3. புலியும், யானையும் 4. சிங்கமும், புலியும்

03. பைந்தமிழ் பாவாணர்கள் தத்தம் பாடல்களில் உவமைச் சுவையினை உள்ளடக்கி கவின் ஊட்டுவர். **'கவின்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
 1. அழகு 2. சுவை 3. தெளிவு 4. அறிவு

04. திருக்குறள் ஓதுவதற்கு எளிது **'எளிது'** என்பதன் எதிர்கருத்து.
 1. இலகு 2. தெளிவு 3. சிறிது 4. அரிது

05. **'உழவன்'** என்பதன் எதிர்பாற் சொல்.
 1. உழவி 2. உழத்தி 3. உழவாள் 4. உள்ளி

**பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. அன்பு, வண்டு, மது, குளிர்ச்சி ஆகிய பல பொருட்கள் உணர்த்தும் ஒரு சொல்.
 1. அளி 2. அற்பு 3. கீதம் 4. கவி

07. காக்கையின் இளையது குஞ்சு என்பது போல கீரியின் இளையது.
 1. குட்டி 2. குஞ்சு 3. பிள்ளை 4. பறழ்

08. 'மணிவிழா' என்றழைக்கப்படுவது.
 1. வெள்ளிவிழா 2. வைரவவிழா 3. பவளவிழா 4. பொன்விழா

09. எருது முக்காரம் இடுவது போல குரங்கு.
 1. கத்தும் 2. அலறும் 3. அலப்பும் 4. கூவும்

10. ரவி தனது நண்பனுக்கு SMS இன் மூலம் செய்தி அனுப்பினான். இங்கு SMS என்பதன் தமிழ் வடிவம்.
 1. நீண்ட தூர செய்தி 2. குறுஞ்செய்திச் சேவை
 3. எட்டச்செய்தி 4. அந்நியச் செய்தி

11. ஆடுகளின் கூட்டம் மந்தை எனப்படுவது போல தோழியர் கூட்டம்.
 1. குழு 2. கும்பல் 3. ஆயம் 4. குவியல்

12. நிறுத்தற் குறிகளில் வியப்புக்குறி அல்லது ஆச்சரியக் குறி எனப்படுவது.
 1. , 2. ? 3. ! 4. .

13. யானையின் மலம் இலத்தி என்பது போல பறவைகளின் மலம்.
 1. விட்டை 2. பிழுக்கை 3. எச்சம் 4. சாணம்

14. எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே அறியும் ஆற்றல் படைத்தவன்.
 1. சோதிடன் 2. தீர்க்கதரிசி 3. ஞானி 4. பௌராணிகன்

15. கந்தம், நாற்றம், விரை குறிக்கும் ஒரு சொல்.
 1. மணம் 2. துர்மணம் 3. வாசனை 4. அழகு

**பின்வருவனவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. மதில் சுவரை நான் தாண்டியதே, 'பகீரதப்பிரயத்தனம்' என்றார் குமாரப் புலவர் பகீரதப் பிரயத்தனம் என்ற மரபுத் தொடரின் பொருள்.
 1. வீண்பாடுபடுதல் 2. நிலைகுலைதல்
 3. விடாமுயற்சி செய்தல் 4. விரைந்து பாய்தல்

17. ஒட்டியும் ஒட்டாமல் இருக்கும் உறவை விளக்குவதற்கு கையாளப்படும் உவமை தொடர்.
 1. ஒளியும் இருளும் போல 2. ஓடும் புளியம்பழமும் போல
 2. பாம்பும் கீரியும் போல 4. காட்டாற்று வெள்ளம் போல

18. காயம்பட்ட இடத்திலிருந்து குருதி 'குபீர் குபீர்' எனப் பாய்ந்தது. இதில் குபீர் குபீர் என்பது.
 1. அடுக்கு மொழி 2. அடுக்குத் தொடர்
 2. இணைமொழி 4. இரட்டைக் கிளவி

19. நல்லதிருக்க தீயதை நாடுதல் என்ற கருத்தினைத் தரும் உவமைத் தொடர்.
 1. பாம்புக்கு பால் வார்த்ததைப்போல
 2. கனியிருக்க காய் கவர்தல் போல
 3. அலர் அருகே சேர்ந்த மலர் போல
 4. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல

20. தன்னந்தனியாய் முன்பின் தெரியாத நகரைச் சென்றடைந்த சிறுவனது நிலையை உணர்த்த பொருத்தமான உவமைத் தொடர்.
 1. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல
 2. வலையிற் சிக்கிய மான் போல
 3. கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல
 4. சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் ஓரெழுத்துச் சொற்களின் கூட்டம்.
 1. கா, மை, தை 2. பு, வெ, மு
 2. பி, சை, வா 4. தோ, போ, சௌ

22. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணமாகக் கொள்வது.
 1. கற்குகை 2. கண்மணி 3. மரவேர் 4. மலைத் தொடர்

23. படிக்கட்டுகளில் ஏறி மலைக் கோவிலுக்கு சென்றான். இங்கே 'மலைக்கோவில்' எனன்பது.
 1. மூன்றாம் வேற்றுமைத் தொகை
 2. ஐந்தாம் வேற்றுமைத் தொகை
 3. ஆறாம் வேற்றுமைத் தொகை
 4. ஏழாம் வேற்றுமை தொகை

24. பொழுது புலர்ந்தது ...... இங்கு பொழுது என்பது எவ்வகைப் பெயர்.
 1. பொருட்பெயர் 2. இடப்பெயர்
 3. காலப்பெயர் 4. சினைப்பெயர்

25. மென்றொடர் குற்றியலுகரமாக வருவது.
 1. கொக்கு 2. பந்து 3. வரகு 4. பயறு

26. இன் சொல் இன்பம் தரும். இன்சொல் என்பது.
 1. பண்புத்தொகை 2. உவமைத் தொகை
 3. வேற்றுமைத் தொகை 4. அன்மொழித் தொகை

27. 'கல்விக்கடல்' என்பது.
 1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. சிலேடை

28. 'மாலை முன்றில் குறுங்கால் கட்டில் மனையோன் துணைவி' முன்றில் என்பது.
 1. இலக்கணப்போலி 2. இலக்கணம் உடையது
 3. எழுத்துப்போலி 4. மரூஉ

29. பின்வருவனவற்றுள் விழித் தொடருக்கு உதாரணம்.
 1. பரதன் வந்தான் 2. வந்தான் பரதன்
 3. வந்த பரதன் 4. பரதா வா

30. ' உறுபசி தீர்ப்பாய் என்று எண்ணி வந்தேன்' என்ற வாக்கியத்தில் உறு என்ற சொல்.
 1. பெயர் 2. வினை 3. உரி 4. இடை

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

31. அருணன் வைத்திருந்த புத்தகங்கள்
 1. புத்தம் புதியதாய் இருந்தன 2. புத்தம் புதியதாய் இருந்தது
 3. புத்தம் புதியனவாய் இருந்தன 4. புத்தம் புதியனவாய் இருந்தது

32. கல்வி சீர்திருத்த ஆணைக்குழுவினர்.
 1. பல ஆலோசனைகளை முன்வைத்தது
 2. பல ஆலோசனையை முன்வைத்தது
 3. பல ஆலோசனைகளை முன்வைத்தனர்
 4. பல ஆலோசனைகளை முன்வைத்தது

33. பழமொழி நானூறு என்னும் நூலில் ஒவ்வொரு.
 1. பாடலிலும் ஒவ்வொரு பழமொழி இடம்பெறுகின்றது
 2. பாடல்களிலும் ஒவ்வொரு பழமொழிகளும் இடம்பெறுகின்றன
 3. பாடலிலும் ஒவ்வொரு பழமொழிகள் இடம்பெறுகின்றன
 4. பாடல்களிலும் ஒவ்வொரு பழமொழி இடம்பெறுகின்றது

**பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகள் அற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

34. 1. தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது
 2. தொழிற்சாளைகளில் உற்பத்தியைப்பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது
 3. தொழிற்சாலைகளில் உர்பத்தியைப்பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது
 4. தொழிற்சாலைகளில் உற்பத்தியைப்பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன

35. 1. சமையளுக்குச் சுவையூட்ட கறிவேப்பிலை பயன்படுகின்றது
 2. சமையலுக்குச் சுவையூட்ட கருவேப்பிலை பயன்படுகின்றது
 3. சமையலுக்குச் சுவையூட்ட கருவேப்பிளை பயன்படுகின்றது
 4. சமையலுக்குச் சுவையூட்ட கறிவேப்பிலை பயன்படுகின்றது

**பின்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதன் கீழே தரப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

கலப்பை மாடுகளைக் கொண்டு - பல
கழனி தன்னையே அடுத்து
அலுப்பை அயர்வை விடுத்து - இரவி
அமரும் பொழுதிலும் உழைத்து
நலம் போல் பெற்றிடும் கூலி - சொல்ல
நாவும் கூசிடும் அந்தோ
உளுத்த சோளக் கூழ் - அவர்
ஓட்டைக்கையால் இரண்டாம்

36. இப்பாடல் எவருடைய வாழ்க்கையைப் பற்றி பாடப்பட்டுள்ளது.
 1. தொழிலாளர் 2. இடையர் 3. உழவர் 4. பண்ணையாளர்

37. 'இரவி அமரும்போது உழைத்து' என்ற தொடர் உணர்த்துவது.
 1, மாலைப் பொழுதில் உழைக்கின்றனர்
 2. காலைப் பொழுதில் உழைக்கின்றனர்
 3. இரவி போல உழைக்கின்றனர்
 4. அல்லும் பகலும் உழைக்கின்றனர்

38. இவர்கள் வாழ்க்கை நிலைமை பற்றி நீங்கள் கருதுவது யாது?
 1. செல்வமிக்க மகிழ்ச்சிகரமான வாழ்க்கை
 2. ஓரளவு திருப்திகரமான வாழ்க்கை
 3. வறுமையுடன் கூடிய துன்பகரமான வாழ்க்கை
 4. அலுப்பும் அயர்வும் உடைய வாழ்க்கை

39. சொல்ல நாவும் கூசிடும் அந்தோ ! இங்கு 'அந்தோ' என்ற இடைச்சொல் உணர்த்தும் பொருள்.
 1. அச்சம் 2. இரக்கம் 3. ஐயம் 4. இகழ்ச்சி

40. கிழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும், அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.

அ. ஆங்கில மொழி போன்ற மேலைத்தேச மொழிகளில் வளர்ச்சியுற்ற இலக்கிய வடிவங்களும் புதுக்கருத்துக்களும் தமிழிலே எடுத்தாளப்பட்டுள்ளமை இன்னொரு பணியாகும்.
ஆ. அவர்கள் ஆற்றிய பணிகளிலே பழைய தமிழில் இலக்கண இலக்கிய நூல்கள் தேடி அச்சில் பதிக்கப்பட்டமை முக்கியத்துவமிக்கது.
இ. இவ்வாறாக ஆங்கிலக் கல்வியின் செல்வாக்குக்கு காரணமாகிய வளமும் வனப்பும் பெற்று தமிழ்மொழி வளர்ச்சியுறலாயிற்று.
ஈ. இதன் பயனாக ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்கள் தமிழ்ப்பணி செய்ய முற்பட்டனர்.
உ. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக் கல்வி பரவத் தொடங்கியது.
 1. ஈ இ அ உ ஆ 2. உ அ ஆ இ ஈ
 2. உ ஈ ஆ அ இ 4. ஈ உ ஆ அ இ

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசை கவிழ்க்க எதிரணியுடன் இணைக

## கூட்டமைப்புக்கு ஐ.தே.க.அழைப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடமாகாணத்தின் வாக்குகளை பெற்றுக்கொள்வதே அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இருக்கும் மிகப்பெரிய சவாலாகும் என தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது எதிரணியுடன் கைகோர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளது.**

கூட்டமைப்பின் ஆதரவு அரசாங்கத்திற்கு தேவையென அரசாங்கம் தெரிவித்திருக்கின்ற நிலையில் வடக்கின் வாக்குகளை வென்றெடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம் என்னவென வினவிய போதே அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த சிங்கள வாக்குகளை எதிர்பார்த்து தேர்தலில் குதிப்பது முட்டாள்தனமான செயல். பௌத்த சிங்கள வாக்குகள் இரு தரப்பினருக்குமே கிடைக்கும். ஆனால் சிறுபான்மை மக்களின் வாக்குகள் எவரேனும் ஒரு தரப்பினையே பிரதிநிதித்துவப்படுத்தும். அதன் காரணத்தினாலேயே அரசாங்கம் வடக்கின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியில் இருக்கின்றமை அரசாங்கத்திற்கு நன்றாகவே தெரியும். அதேபோல் முஸ்லிம் மக்களின் வாக்குகள் அரசாங்கத்திற்கு இல்லை என்பதும் அரசுக்கு தெரியும்.

எனவே சிறுபான்மை மக்களின் வாக்குகளை வென்றெடுப்பதே அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இருக்கும் சவாலாகும்.

அதேபோல் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்களின் வாக்குகளை வென்றெடுப்பதே அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இருக்கும் மிகப் பெரிய சவாலாகும்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது ஆதரவு யாருக்கு என்பதை இதுவரையில் தெரிவிக்காதுள்ளது. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பது இந்த அரசாங்கத்தினால். வடக்கில் இராணுவ ஆட்சி நடத்தப்படுவது இந்த அரசாங்கத்தினால். எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை எட்டுவதில் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்துள்ளது.. தற்போது பொது எதிரணியினை நாம் உருவாக்கி வருகின்றோம். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவும் உதவிகளும் எமக்கு தேவைப்படுகின்றது.

அது மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதும் எமது பொது எதிரணியின் ஒரு கோரிக்கையே. அதனை பலப்படுத்த தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்முடன் கைகோர்க்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இரு அமைச்சர்கள் நாடகமாடுகின்றனர்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் டியூ குணசேகர போன்றவர்கள் நாடகமாடுகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவி மற்றும் ஏனைய வரப் பிரசாதங்களுக்காக 17 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யவும் 18 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவும் நாடாளுமன்றில் கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்த தரப்பினர் இன்று போலியாக நாடகமாடி வருகின்றனர் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டுமென இன்று கோரிக்கை விடுத்து வரும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, டியூ.குணசேகர போன்றவர்கள் போலி நாடகமாடி வருகின்றனர்.

17 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யவும் 18 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவும் ஆதரவு தெரிவித்த இவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் பொய்யாக கோசமெழுப்புகின்றனர். எனினும் காலம் தாமதித்தேனும் அத்துரலிய ரத்ன தேரர் உண்மை நிலைமையை உணர்ந்து கொண்டுள்ளார்.

குடும்பவாத எதேச்சாதிகார ஆட்சியினால் நாடு எதிர்நோக்கக்கூடிய பாதக விளைவுகளை புரிந்து கொண்டமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

நாடு அடைந்துள்ள அழிவுகளிலிருந்து மீட்டு எடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

ஆளும் கட்சிக்குள் இன்று பாரியளவில் பிளவு ஏற்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சமசமாஜ கட்சி போன்றன ஆளும் கூட்டணியுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங். சிறார்கள் மத்தியில் போஷாக்கின்மை அதிகரிப்பு



சிறுவர் மத்தியில் போஷாக்கின்மை அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.இன்று மூன்று பிள்ளைகளில் ஒருவருக்கு மந்த போசனை நிலவுகின்றது. கம்பஹா மாவட்டத்தில் அதிகளவானவர்கள் மந்த போஷாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை முழுவதிலும் மூன்றில் ஒரு குழந்தைக்கு மந்த போஷாக்கு காணப்படுகின்றது.

இவ்வாறான ஓர் நிலைமையில் நாட்டில் மந்த போசனை குறைந்துள்ளதாகத் தெரிவித்து ஆளும் கட்சி மக்களை பிழையாக வழிநடத்தக் கூடாது.கடந்த நான்கு ஆண்டுகளில் சிறுவர்கள் மீது 32000 குற்றச் செயல்களும், பெண்கள் மீது 36000 குற்றச் செயல்களும் இடம்பெற்றுள்ளன.

மாகாண சபைகளில் ஐந்து வீதமான பெண்களே அங்கம் வகிக்கின்றனர். நாடாளுமன்றில் 11 பெண்களே அங்கம் வகிக்கின்றனர் என ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## கத்தியும் புத்தியும்

ஒரு வீட்டிலே திருடுவதற்கு திருடனொருவன் திட்டமிட்டான். இருட்டிய பின்னர், வீட்டிலுள்ளவர்கள் தூங்கிய பின்னர்தான் திருட வேண்டும்.ஆனால் இரவில் படுக்கப்போகும் போது கதவைச் சாத்தி உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டு விடுவார்களே... என்ன செய்வது என அந்தத் தீருடன் யோசித்தான். பகல் நேரத்தில் யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டினுள் நுழைந்து ஒளிந்து கொள்வோம்... இராத்திரி எல்லோரும் தூங்கிய பின்னர் வீட்டிலிருக்கும் பெறுமதியான பொருட்களை எடுத்துக் கொண்டு ஓடி விடுவோம் எனத் திட்டமிட்டான்.

அதற்கமைய ஒருநாள் பகல் நேரத்தில் அந்த வீட்டுக்காரர் வெளியே புறப்பட்டுச் சென்ற பின்னர், வீட்டுக்கார அம்மா சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரம் மெதுவாக உள்ளே நுழைந்துவிட்டான். ஒளிந்து கொள்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடினான். வலது பக்கத்தில் ஒரு அறை இருந்தது.மெதுவாக அதைத் திறந்து பார்த்தான். அது படுக்கை அறை. உள்ளே ஒரு பெரிய கட்டில் இருந்தது.திருடன் அந்தக் கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான். இரவில் எல்லோரும் தூங்கியதும் வேலையை ஆரம்பிக்கலாமென இரவு வரும் வரை காத்திருந்தான்.

இரவு நேரத்தில் வெளியே சென்றிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்தான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு லைற்றை நிறுத்தி விட்டுப் படுத்துக்கொண்டான். வீட்டுக்கார அம்மாவும் தனது வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு வந்து படுத்துக் கொண்டார். நடு இராத்திரி. விடிவிளக்கு லேசாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரன் கண்விழித்தான். கட்டிலுக்கு நேர் எதிரில் ஒரு கண்ணாடி அதிலே, கட்டிலுக்கு கீழே ஒளிந்து கொண்டிருந்த திருடனின் உருவம் தெரிந்து உடனே "திருட்ன்... திருடன்" என்று சத்தம் போடலாமா? மேசையில் இருக்கிற கத்தியை கையில் எடுத்துக் கொள்ளலாமா? என்று யோசித்தான். இந்த நேரத்திலே கத்தியை உபயோகப்படுத்துவதை விடப் புத்தியை உபயோகிப்பது தான் புத்திசாலித்தனம் என்று நினைத்தான். அதன்படி செயற்பட ஆரம்பித்தான். தூங்கிக் கொண்டிருந்த மனைவியை மெதுவாக தட்டி எழுப்பினான்.

மனைவியுடன் ரொம்ப சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்திசாலி. அதனாலே கணவன் ஏதோ காரணத்துடன் தான் பேசுகிறான் என்பதை உணர்ந்து அதற்கேற்றபடி பதில் சொல்ல ஆரம்பித்தான். கணவன் கேட்டான் இதோ பார்... எங்களுக்குக் குழந்தை பிறந்தால் அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்று தான் பெயர்வைக்க வேண்டும்.

"அதெல்லாம் முடியாது... ஆண் குழந்தையாக இருந்தால் ஏகாம்பரம்... பெண் குழந்தையாக இருந்தால் பங்கயவல்லி. இதுதான் உங்கள் மாமனார் மாமியார் பெயர். இதைத்தான் வைக்கவேண்டும்" என்றாள் மனைவி. அதெல்லாம் முடியாது. நான் தீர்மானித்து விட்டேன்... கிருஷ்ணமூர்த்திதான் எனக் கத்தினான் கணவன். "இல்லை... ஏகாம்பரம் பங்கயவல்லி, என்று கத்தினாள். மனைவி வாதம் பலித்துவிட்டது. "கிருஷ்ணமூர்த்தி... கிருஷ்ணமூர்த்தி... என்று இவன் கத்த, ஏகாம்பரம்–பங்கயவல்லி ... ஏகாம்பரம்– பங்கயவல்லி" என்று அவள் கத்த ஒரே சத்தம் . இந்தச் சத்தத்தைக் கேட்டதும் பக்கத்து வீடு, எதிர் வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்திருந்து ஓடிவந்து இவன் வீட்டுக் கதவை தட தட என்று தட்டினார்கள். இவன் சாவகாசமாக எழுந்துபோய் கதவைத் திறந்தான்... "என்ன நடந்தது? இந்த அர்த்த இராத்திரியிலே ஏன் எங்களையெல்லாம் கூப்பிட்டீர்கள் என்று கேட்டார்கள்? பக்கத்துவீட்டு கிருஷ்ணமூர்த்தி, எதிர்த்த வீட்டு ஏகாம்பரம், பங்கயவல்லி உங்கள் ஒருவரையும் கூப்பிடவில்லை. எங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி எனக்கும் மனைவிக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டுவிட்டது. இதுதான் விடயம். உங்களுக்குச் சந்தேகம் என் றால் கட்டிலுக்குக் கீழே இருப்பவரிடம் கேட்டுப்பாருங்கள்" என்றரர். உடனே எல்லோரும் விடயத்தைப் புரிந்து கொண்டு கட்டிலுக்கு அடியில் ஒளிந்திருந்த திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள்.

நெருக்கடியான நேரங்களிலே பதறாமல் புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கதை. புத்திசாலித்தனமாகச் செயற்படும் ஒரு குடும்பத் தலைவி இருந்தார். அவர் என்ன செய்வார் தெரியுமா? இராத்திரியானால் எல்லோரும் வீட்டை உட்புறமாகப் பூட்டிக் கொண்டு தானே படுப்பார்கள். ஆனால் அந்த அம்மா பக்கத்து வீட்டுக்காரரிடம் சொல்லி கதவை வெளிப்புறமாக பூட்டுப்போட்டு பூட்டும்படி செய்துவிடுவார். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? வெளியே பூட்டினால் திருடன் சுலபமாகப் பூட்டை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து விடுவானே?" என்று கேட்டேன் "அதற்காக இல்லை. உள்ளே இருப்பவர் சுலபமாக வெளியே போய்விடக்கூடாது. அல்லவா? அதற்காகத்தான் இந்த ஏற்பாடு" என்றார் அந்த அம்மா! என்ன சொல்கிறீர்கள் என்றேன். "ஆமாம்... இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு" என்று தன் வீட்டுக்காரரைக் காட்டினார் அவர்.

பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன் வீட்டைப் பூட்டி வைப்பது ஒரு பெரிய விடயம் இல்லையா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**...வீ**ட்டுக்குத் திரும்பிய பேராசைக்கார அண்ணன், கால் ஒடிந்து எங்காவது குயில் விழுந்து கிடக்கிறதா என்று தேட ஆரம்பித்தான்.

பல நாள் தேடியும் கால் ஒடிந்த குயில் தென்படவில்லை.

பேராசைக்காரனுக்கு புத்தி நல்ல வழியில் வேலை செய்யாதுதானே.

நோல்பு விடயத்திலும் அப்படித்தர்ன் ஆயிற்று.

காட்டுக்குச் சென்று, ஒரு குயிலைப் பிடித்து வந்தான்.

நன்றாக இருந்த அதன் காலை ஒடித்தான்.

அது, வலியால் துடித்தது.

ஒடித்த குயிலின் காலுக்கு மருந்து போட்டு, அது குணமாகும் நாளை எதிர்பார்த்தான்.

குயிலுக்கு காயம் ஆறியதும் பறந்து போய்விட்டது.

நோல்பு வசந்த காலத்துக்காக காத்திருந்தான்.

வசந்த காலமும் வந்தது. அந்தக் குயிலும் வந்தது.

ஒரு பூசணி விதையை நோலபுவுக்குக் கொடுத்து விட்டுப் பறந்து போனது.

பேராசைக்கார நோல்பு இதைத் தானே எதிர்பார்த்தான்.

குயில் கொடுத்த பூசணி விதையை நட்டு வளர்த்தான்.

பூசணிக் கொடியில் பூச்ணி காய்க்கத் தொடங்கியது. நோல்பு மகிழ்ச்சி அடைந்தான்.

பூசணிக்காய்கள பெரிதாகும் வரை தவிப்போடு காத்திருந்தான்.

ஒருவழியாக, காய்கள் பெரிதானதும் எல்லாவற்றையும் பறித்துவந்து, நடு வீட்டில் வைத்தான்.


பூசணியை அறுக்கும் போது தண்ணீர் கொட்டியது.

நோபுலுக்கு அப்போதும புத்தி வரவில்லை.

இந்தத் தண்ணீர் எல்லாம் தங்கமாக மாறும் என்று நம்பினான்.

அவன் கழுத்து அளவுக்கு தண்ணீர் வந்துவிட்டது.

இப்போது, நோல்புவுக்கு உயிர் பயம் வந்தது. 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று



யாரும் வீட்டுக்குள் வந்து விடக் கூடாது என்று வீடடின் எல்லாக் கதவுகளையும் உள்பக்கமாகத் தாளிட்டான்.

ஜன்னல்களையும மூடித்தாளிட்டான்.

ஒரு பெரிய கத்தியை எடுத்துவந்து, ஆவலுடன பூசணியை வெட்டினான்.

தங்கத்துக்குப் பதிலாக தண்ணீர் கொ்ட்டியது.


வீட்டுக் கதவைத் திறந்தான்.

ஆற்று வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மரக்கட்டை போல வெளியே வந்து விழுந்தான்.

வீட்டில் இருந்த செல்வம் எல்லாம் பூசணியில் இருந்த தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்டது.

நோல்பு ஏழையாகிப போனான. சாப்பிடக்கூட பணம் இல்லை.

தம்பியைப் பார்க்க வெட்கப்



ஏமாற்றம் அடைந்த நோல்பு, அடுத்த பூசணியையும் வெட்டினான், அதிலிருந்தும் தண்ணீர்தான் கொட்டியது.

'ஒருவேளை இந்தப் பூசணியில் இருக்குமோ, அந்தப் பூசணியில் இருககுமோ' என்று ஒவ்வொரு பு,சணியாக எடுத்து, வெறியுடன் வெட்டினான்.

எல்லாப் பூசணியில் இருந்தும் அருவி போல பட்டு, ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்தான்.

அண்ணன் நோல்பின் நிலையைக் கேள்விப்பட்டு, தம்பி கியூங்பு வருத்தப்பட்டான். அண்ணனைச் சந்தித்து, தன்னிடம் இருந்த தங்கத்தைப் பகிர்ந்து கொடுத்தான்.

தம்பியின் பாசத்தால் நோல்பு மனம் திருந்தினான்.

இப்போது, அந்தக் கிராமத்தில் இருவருமே எல்லோருக்கும் உதவும் பாசம் மிக்க சகோதரரகள். *(முற்றும்)*




- ❖ 764 - திபெத்தியப் படைகள் சீனாவின் டாங் மக்களின் தலைநகரான சங்கான் நகரை 15 நாட்கள் கைப்பற்றி வைத்திருந்தன.
- ❖ 1833 - அலபாமாவில் லியோனீட் விண்கற்கள் வீழ்ந்தன.
- ❖ 1893 - அன்றைய பிரித்தானிய இந்தியாவுக்கும் (தற்போதைய பாகிஸ்தான்) ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக்கோடு கீறப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.
- ❖ 1905 - நோர்வே மக்கள் வாக்கெடுப்பு மூலம் குடியாட்சியை விட மன்னராட்சியே சிறந்தது எனத் தெரிவித்தனர்.
- ❖ 1906 - பாரிசில் அல்பேர்ட்டோ சாண்டோஸ்-டியூமொண்ட் வானூர்தி ஒன்றைப் பறக்கவிட்டார்.
- ❖ 1918 - ஆஸ்திரியா குடியரசாகியது.
- ❖ 1927 - மகாத்மா காந்தி இலங்கைக்கான தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை மேற்கொ்ண்டார்.
- ❖ 1927 - லியோன் ட்ரொட்ஸ்கி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஜோசப் ஸ்டாலின சோவியத்தின் முழு அதிகாரத்தையும் கைபபற்றினார்.
- ❖ 1938 - மடகஸ்காரை யூதர்களின் தாயகமாக மாற்றும் நாசி ஜேர்மனியின் திட்டத்தை "ஹேர்மன் கோரிங" என்பவர் வெளிக் கொணர்ந்தார்.
- ❖ 1941 - இரண்டாம் உலகப் போர்: செவஸ்தபோல் நகரில் சோவியத் போர்க் கப்பல் "செர்வோனா உக்ரயீனா" மூழ்கடிக்கப்பட்டது.
- ❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின்" அவ்ரோ போர் விமானம் ஜேர்மனியின் போர்க கப்பல் ஒன்றை நோர்வேயில் மூழ்கடித்தது.
- ❖ 1948 - டோக்கியோவில் பன்னாட்டு போர்க் குற்றவாளிகளின் நீதிமன்றம் ஒன்று ஏழு ஜப்பானிய இராணுவ அதிகாரிகளுக்கு 2ஆம் உலகப் போரில இழைத்த குற்றங்களுக்காக மரணதண்டனை விதித்தது.
- ❖ 1969 - மை லாய் படுகொலைகள் தொடர்பான உண்மைக்களை ஊடகவியலாளர் சீமோர் ஹேர்ஷ் வெளியிட்டார்.
- ❖ 1980 - நாசாவின் விண்கப்பல் வொயேஜர் 1 சனிக் கோளுக்கு மிக அருகில் சென்று அதன் வளையங்களின் படங்களை பூமிக்கு அனுப்பியது.
- ❖ 1981 - கொலம்பியா விண்ணோடம் தனது இரண்டாவது விண்வெளிப் பயணத்தை இரண்டு வீரர்களுடன் ஆரம்பித்தது.
- ❖ 1982 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரராக யூரி அந்திரோப்பொவ் தெரிவு செய்யப்பட்டார்.
- ❖ 1982 - போலந்தின் சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லேக் வலேசா பதினொரு மாத் சிறைத்தண்டனைக்குப் பின்பு விடுதலையானார்.
- 1990 - இணைய வலை பற்றிய தனது முதலாவது திட்டத்தை ரிம் பேர்னேர்ஸ்-லீ அறிவித்தார்.
- ❖ 1994 - இலங்கையின் 5 ஆவது அரசுத் தலைவராக சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க தெரிவு செய்யபபட்டார்.
- ❖ 1998 - கியோட்டோ பிரகடனத்தில் ஆல் கோர் கையெழுத்திட்டார்.
- ❖ 2001 - ஆப்கானிஸ்தானின் காபூல் நகரை விட்டு தலிபான படைகள் முற்றாக விலகினர்.
- ❖ 2006 - முன்னாள் சோவியத் குடியரசான தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடமிருந்து பிரிந்து செல்ல வாக்கெடுப்பை நடத்தியது.

பிறப்புகள்

- ❖ 1817 - பஹாவுல்லா, பஹாய் சமயத்தைத் தோற்றுவித்தவர் (இ. 1892)
- ❖ 1866 - சுன் இ சியன், சீனாவின் புரட்சித் தலைவர் (இ. 1925)
- ❖ 1896 - சலீம் அலி, இந்திய பறவையியல் வல்லுநர் (இ. 1987)
- ❖ 1920 - வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (இ. 2006)

இறப்புகள்

- ❖ 2001 - சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி, இந்து அமெரிக்க ஆன்மிகவாதி (பி. 1927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




கை மூட்டுவலி டெஸ்ட் போட்டிகளில் 35 ஆவது சதத்தை அடித்த உலகசாதனை படைக்க இருந்த வாய்ப்பு கைநழுவிப் போனது மனதளவில் ஆன வேதனை. இந்த மனவலியுடன் உடல் வலியும் சேர்ந்து கொண்டது. ஆம் வழக்கமான எடையை விடக் கூடுதலான எடை கொண்ட மட்டையைப் பயன்படுத்தியதால் அவரது கை மூட்டு வலி நாளுக்கு நாள் அதிகமாகியது.

வேறு வழியின்றி மருத்துவப் பரிசோதனைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டார். முழுமையான ஓய்வில் இருந்தால் மட்டுமே கை மூட்டு வலி குணமடையும் என்றும் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்காவது விளையாடக் கூடாது என்றும் ஆலோசனை கூறப் பட்டது. கிரிக்கெட்டையே உணவாகவும், சுவாசமாகவும் பாவித்த சச்சினுக்கு மருத்துவ கிரிக்கெட் ரசிகர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. ஆனாலும், சச்சின் மனம் தளரவில்லை. ஆறு மாதம் முழுமையாக ஓய்வு எடுத்துக் கொண்டால் இன்னும் ஆறு ஆண்டுகள் தாக்குப் பிடிக்கலாம் என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டார்.

கிட்டத்தட்ட 2004 ஆம் ஆண்டு இறுதிவரை அவர் ஓய்வில் இருக்க வேண்டியதாயிற்று. வருட இறுதியில் ஆஸ்திரேலியக் குழு இந்தியாவிற்கு விஜயம் செய்தது. கை மூட்டு வலி கொஞ்சம் சரியான நிலையில் சச்சின் மீண்டும் களம் இறங்கினார். 3 போட்டிகளில் இந்தியா 1 போட்டியில் மட்டுமே வெற்றி பெற ஆஸ்திரேலியா 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இந்தியா பெற்ற வெற்றிக்கு கை வலியுடன் ஆடிய சச்சினின் பங்களிப்பான 55 ரன்கள் காரணமாக அமைந்தன என்பதைத் தவிர சிறப்பாகச் சொல்வதற்கு அந்தப் போட்டிகள் சச்சினுக்கு அமையவில்லை.

அடுத்தடுத்து நடைபெற்ற போட்டி

ரின் இந்த ஆலோசனை பேரிடியாக விழுந்தது. அதிகபட்சம் 2011 உலகக் கோப்பை வரையிலாவது விளையாட வேண்டும். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 100 சதங்களை அடித்து யாருமே நெருங்க முடியாத உலக சாதனையைச் சச்சின் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் இந்தத் தடங்கல்

**பேட்டிங் ஸ்டைல்:-** வலது கை ஆட்டக்காரர்
**பௌலிங் ஸ்டைல்:-** லெக் பிரேக் சுழற்பந்து வீச்சாளர்
**மட்டைஎடை:-** 3பவுண்ட் 2அவுன்ஸ் அல்லது 1.42 கிலோ
**மறக்கமுடியாதது:-** 1992 இல் உலகக்கோப்பை பாகிஸ்தான் வீழ்த்தியது.
**மோசமானது:-** 1992 ஆர். எஸ்.ஏ ஒருநாள் போட்டிகளில் தோற்றது
**ஹீரோக்கள்:-** கவாஸ்கார், விவ் ரிச்சர்ட்ஸ், கபில், இம்ரான்கான், சந்திப்பாட்டீல்
**பிடித்தவர்கள்:-** வினோத் காம்ப்ளி, லாரா, ரோட்ஸ்

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!



களில் சச்சினின் விளையாட்டு ரொம்பவுமே சுமாராகத்தான் இருந்தது. 2005 டிசெம்பர் 22 ஆம் திகதி டெல்லி ஃபெரோஷ் ஷா கூட்லா மைதானத்தில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கையுடன் டெஸ்ட் போட்டியிலாவது சச்சின் 35 ஆவது சதத்தை அடித்து உலக சாதனை படைக்க வேண்டும் என்று கிரிக்கெட் ரசிகர்கள் வேண்டாத தெய்வத்தை எல்லாம் வேண்டிக்கொண்டனர். ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் சச்சின் அதிரதியாக விளையாடி தனது 35 ஆவது டெஸ்ட் சதத்தை அடித்து உலக சாதனையைப் பதிவு செய்தார். ஃபெரோஷ் ஷா கிரிக்கெட் மைதானமே ஆரவாரத்தில் அதிர்ந்தது. வழக்கம்போல் சச்சின் அமைதியாக கிரிக்கெட் மட்டையை உயரத் தூக்கிப் பிடித்து தனது நன்றியைத் தெரிவித்தார். உலக சாதனையை ரசிகர்களுக்குக் காணிக்கை ஆக்கினார்.

சச்சினின் 35 ஆவது டெஸ்ட் சதத்துடன் உலக சாதனை படைத்ததைத் தவிர, 2004-2005 ஆண்டுகளில் சச்சினின் விளையாட்டு பரவலாகப் பேசப்படவில்லை. 2005 ஆம் ஆண்டு இந்திய குழு பாகிஸ்தானுக்குப் பயணித்தது.

**கே. ரமேஷ்** (தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

..ஒரே ஒரு நிபந்தனை, கண்டிப்பாக ஏதாவது கவலைகளை எடுத்துச் செல்ல வேண்டும். மக்கள் அனைவரும் அந்த நிகழ்ச்சிக்காகக் குழுமினர். மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து தங்கள் கவலைகளைப் பற்றிப் பேசத் தொடங்கினர். பிறகு, கவலைப்பரிமாற்றம் ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டது. நெடு நேர

## கவலைகள் இன்றி வாழ்தல்!


மாகியும் ஒருவர்கூட தங்களது கவலைகளைப் பானையில் போட முன்வரவில்லை! அனைவருடனும் பேசியதில், ஒவ்வொருவருமே மற்றவர்களுடைய கவலைகளை விட தங்களுக்குப் பழக்கமான சின்ன கவலைகளே எவ்வளவோ மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

நான் சொல்கிறேன்...... பல சமயங்களில் நாம் சரியான உண்மையைப் பார்க்காமல் வெறுமனே பேசிக் கொண்டிருக்கிறோம். நாம் கவலைகள் என்று அழைக்கப்படுவதை ஆழமாகப் பார்க்கும் பொழுது ஒன்றுமில்லாத விடயத்தை வெறுமனே பெரிதுபடுத்திக்கொண்டிருப்பதைப் புரிந்துகொள்வோம்.

சரி, நீங்கள் கவலைப்படும் பொழுது உங்கள் மனதில் உண்மையிலேயே என்ன நிகழ்கிறது என்பதை இப்பொழுது ஆராய்வோம்.

நீங்கள் எதைப் பற்றியேனும் கவலைப்படும்பொழுது உங்கள் மனதைச் சற்று கவனியுங்கள்.

முற்றிலும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற அநேகமாக எதிர்மறையான ஒரு



தொடர் எண்ண ஓட்டம் உங்கள் மனதில் உற்பத்தியாவதைக் காண்பீர்கள். எதிர்மறையான வார்த்தைகள் ஒரு ஓட்டம் போல மீண்டும் உங்கள் மனதிற்குள் வருவதைக் காண்பீர்கள்.

பாருங்கள்... நான் இரண்டு விதமான பேச்சுக்களை உபயோகப்படுத்துகிறோம்- வெளியே பேசுதல் மற்றும் உள்ளுக்குள்ளேயே பேசிக் கொள்ளுதல். வெளியே பேசுதல் என்பது மற்றவர்களுடன் பேசுவது- நாம் சாதாரணமாக பேச்சு அல்லது உரையாடல் என்று அழைப்பது. உள்ளுக்குள்ளேயே பேசிக்கொள்ளுதல் என்பது நாம் நமக்குள்ளேயே பேசிக் கொள்வது. உண்மையில், இந்த உள்ளுக்குள் பேசிக் கொள்ளுதல் நமக்குள் எப்பொழுதும் தொடர்ந்து நடந்து

### ஆன்மீகம் 72

கொண்டிப்பது. இந்த உள்ளுக்குள் பேசிக் கொள்வது உள் பேச்சு என்று அழைக்கப்படுகிறது. இதைத்தான் கவலை என்றும் அழைக்கிறோம்.

மனதிற்குள் நிகழும் இந்தக் கட்டுப்படுத்தப்படாத தொடர் உள் பேச்சே கவலையாகும். இந்த உள் பேச்சு உங்கள் எஜமானனாகி விடுகிறது. அது உங்களைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. அதுவே முழுநேர நிகழ்வாகிவிடுகிறது.

நீங்கள் பேசும் வார்த்தை எதுவானாலும் கவனத்துடன் பேசுகிறீர்கள். இல்லாவிடில், சமூகம் உங்களை கவனமாக இருக்குமாறு வற்புறுத்துகிறது. இல்லையா?

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

### முதியோர் வட்டி வருமானத்தினை ஸ்திரப்படுத்தல்

கௌரவ சபாநாயகர் அவர்களே அரசாங்க வங்கிகளில் தமது வைப்புக்களை பேணுகின்ற இளைப பாறிய மற்றும் முதியோர் வருடாந்த வட்டி வீதத்தினை 12 சதவீதமாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அத்தகைய வைப்புகளுக்கு இந்த வட்டி விகிதத்தினை அரசாங்க வங்கிகள் வழங்கும் வகையில், வயோதிபர்களுக்கு உதவும் வகையில் பயன்படுத்துவதற்காக அடுத்த வருடத்தில் அரசாங்க கடன் நிகழ்ச்சித் திட்டத்தில் ரூபா 30 பில்லியனை 12 சதவீத வட்டி விகிதத்தில் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அனைத்து வர்த்தக வங்கிகளிலும் வயோதிபர்களினால் பேணப்படுகின்ற தனிப்பட்ட வைப்புகளுக்கான நியதிச்சட்ட ஒதுக்கு தேவைப்பாட்டிற்கு மத்திய வங்கி விலக்களிப்பு வழங்கும்.

நிதிக் கம்பனிகளுக்கும் அவர்களது வைப்பு மீதான வட்டியினை 11 சதவீதமாக வழங்குவதற்கும் மத்திய வங்கி அனுமதித்துள்ளது.

முதியோர் கணக்குகளில் இடப்பட்ட வைப்புகளுக்கான வட்டி வருமானத்தினை வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து விலக்களிப்பதற்கும் அடுத்த வருடத்திலிருந்து வட்டி வருமானத்தினை 2.5 சதவீதமாக குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### சந்தைப்படுத்தல் வலையமைப்பு

கௌரவ சபாநாயகர் அவர்களே, நெற் சந்தைப்படுத்தல் சபையின் விருத்தி மற்றும் லங்கா சதொசா, ஒசுசல, மீன்பிடிக கூட்டுத்தாபனம், மில்கோ மற்றும் லக்சல போன்ற சந்தைப்படுத்தல் நிலையங்கள் நுகர்வோருக்கும் அதேபோன்று உற்பத்தியாளருக்கும் உதவும் வகையில் தளம்பலற்ற விலையினை வழங்க முடிந்தது.

எனவே, சிறுவர் பால்மா, மருந் துப் பொருட்கள், பாலுணவு, கோழி இறைச்சி மற்றும் முட்டை, மீன் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஒரே கூரையின் கீழ் நியாயமான சந்தை விலையில் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நிறுவனங்கள் அனைததினதும் சந்தைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் களஞ்சிய வசதிகளை விரிவாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

இந்த சுப்பர் மார்க்கட்டுகளில் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான விசேட வசதிகள் அனைத்து உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும் வழங்கப்படும்.

போட்டிச் சந்தையினை ஊக்குவிப்பதற்கு நகரப் பிரதேசங்களில் வாராந்த சந்தை வசதிகள மற்றும் விசேட பொருளாதார நிலையங்களும் துரிதமாக விரிவாக்கப்படும்.

இம்முன்னெடுப்புகளுக்காக ரூபா 3,000 மில்லியன் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தம்மை ஒழுங்குபடுத்திக கொண்ட சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாரியளவிலான சில்லறை வர்த்தகர்கள் அவர்களது சொந்த உற்பத்திகளை அதிகளவு இலாபத்தில் விற்பனை செய்வ துடன் உள் நாட்டு சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குன்ர்கள் நியாய மற்ற முறையில் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, அத்தகைய சுப்பர் மார்க கட்டுகள் அனைத்து வழங்குனர்களையும் தமது வியாபார நிலையங்களில் சமமாக நடத்துவதனை உறுதிப்படுத்தும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தினை திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

உள்நாட்டில் வழங்கப்பட்ட உற் பத்திகளினால் ஆகக் கூடிய சில்லறை விலையினை 25 சதவீதத்தினை அதிகரிக்காத வகையில் கட்டணங்களை விதிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

பெறுமதிசேர் வரி 1 சதவீதத்தினாலும் மின்சாரம் 15 இலிருந்து 25 சதவீதமாகவும் வங்கிகளின் கடன் பெறல் விகிதம் குறிப்பிடத்தக்களவாக குறைக்கப்பட்டமையினால், அத்தியாவசிய பொருட்களினது விலைகளை 10 சதவீதத்தினால் குறைக்குமாறு சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் ஏனைய வியாபார சமூகங்களை அனைத்தினையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

### அரசாங்க ஊழியர்களுக்கான புதிய சம்பள கட்டமைப்பு

கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த வருடம் என்னால் நியமிக்கப்பட்ட புதிய ஆணைக்குழு 2006 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சம்பள கட்டமைப்புக்கான சில மாற்றங்களை பரிந்துரை செய்துள்ளது.

எனவே, 2015 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில புதிய சம்பள கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கமைவாக, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விசேட கொடுப்பனவுகள் சம்பளக் கட்டமைப்புடன் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் ஆகக்குறைந்த சம்பளம் மாதமொன்றுக்கு 15, ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும்.

சம்பள விகிதத்தினை சிற்றூழியர்கள் மற்றும செயலாளர்களுக் கிடையில் 1 இலிருந்து 4.25 ஆக பேணுவதற்கும் உயர்ந்த சம்பள படியேற்றங்களை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவினைக் கொடுப்பனவினை 2015 ஜனவரியிலிருந்து மாதமொன்றுக்கு 2,200 ரூபாவிலிருந்து 10, ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கமைவாக, அரசாங்க ஊழியர்களின் ஆகக் குறைந்த மாதாந்த வருமானம் 25,000 ரூபாவாக அதிகரிக்கும்.

பதவி உயர்வின்மை, மாகாண சம்பள திருத்தங்களில் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான மாற்றங்கள் மற்றும் மேலதிகப் பணிகளுக்கான கொடுப்பனவுகளில் காணப்படும் முரண்பாடுகள் காரணமாக அரசாங்க சேவையிலுள்ள குறைந்த மட்ட வகுதியினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மத்தியில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் இம்முரண்பாடுகளை திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பல்கலைக்கழகங்கள், கல்வி, சுகாதாரம், நீதித்துறை, பொலிஸ், புகையிரத சேவை மற்றும் தபால் சேவை போன்ற விசேட சேவைகளுக்கு புதிய சம்பள கட்டமைப்புக்கான அங்கீகாரம் வழங்கப்படுவதுடன் இதற்கமைவாக விசேட சேவை கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

விசேட சேவை கொடுப்பனவானது அத்தகைய ஏற்புடையதான அரசாங்க சேவைகள் அனைத்திற்கும் பொருத்தமான வகையில் அதிகரிக்கப்படும்.

உயர் தொழில் முறை வகுதியினருக்கு வழங்கப்பட்ட தொழில் முறை கொடுப்பனவானது, இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு 1 மற்றும் அதற்கு மேலுள்ள அலுவலர்களுக்கும் ஏனைய நாடளாவிய சேவைகளுக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க உயர் தொழில் தகைமைகளைக் கொண்டுள்ளதுடன் 20 வருட சேவையைக் கொண்ட அரசாங்க ஊழியர்களுக்கும் விரிவாக்கப்படும்.



அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் 150 நாட்களுக்கு மேல் அமைய ஊழியர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர்களை உள்ளீர்ப்பதற்கு தேவையான பதவியணிகளை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, புதிய சம்பள கட்டமைப்பு மாற்றம், கொடுப்பனவு மற்றும் பிற சம்பளம் தொடர்பான நன்மைகள் 2015 ஜனவரியிலிருந்து மாதமொன்றிற்கு 3,500 ரூபாவிலிருந்து 15,000 ரூபாவாக சம்பள அதிகரிப்பினை வழங்குவதுடன் கீழ்நிலையிலுள்ள ஊழியர் ஒருவர் ஆகக் குறைந்த சம்பள வருமானமாக 30,000 ரூபாவினை பெற்றுக் கொளவார்.

அனைத்து கொடுப்பனவுகளும் உள்ளடங்கலாக மொத்த சம்பளத்திலிருந்து 40 சதவீதம் வரை அரசாங்க ஊழியர்கள் கடன் பெறுவதனை அனுமதிப்பதனை நான் முன்மொழிகின்றேன்.

அரசாங்க ஊழியர்களின் சிறுவரகளுக்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப பரிசில், தொழிற்பயிற்சி மற்றும் உயர் கல்வி புலமைப் பரிசில்களும் கிடைக்கும் வகையில் விரிவாக்கப்படும்.

பண்டிகை முற்பணங்களை 10 தவணை கட்டணங்களில் செலுத்தும் வகையில் 10,000 ரூபா கடன் வரையறையினை கொண்ட வங்கி அட்டை ஒன்று அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கப்படும். இக் கடன் வசதியானது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உத்தரவாதப்படுத்தப்படும்.

அக்ரஹார திட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சைகளுக்கான காப்புறுதியினை 350,000 ரூபாவிலிருந்து 500,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கல்வி மற்றும் சுகாதாரம போன்ற இடமாற்றல் சேவைகளைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் அவர்களது சேவைக் காலத்தில் பல்வேறு இடங்களில் சேவையாற்றி விட்டு இளைப் பாறியதுடன் இறுதியாகப் பெற்ற தனது சம்பளத்தில் 75 சதவீதத்தினை தமக்கு விருப்பமான வங்கி ஒன்றிலிருந்து பெறுவதனை அனுமதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஊழியர் ஒருவர் ஓய்வூதிய நன்மையினை ஆகக் கூடியது 3 மாதத்திற்குள் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறைகளை துரிதப்படுத்துவதற்காக கோவைகள் அனைத்தும் உரிய பிரதேச செயலகங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஓய்வூதியத் திணைக்களம் மேற்கொள்ளும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கு ஏற்ப சூளுரைப்பதே இன்றைய சூழலில் சூரத்தனம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. தெரிவிப்பு



(நேற்றை தொடர்ச்சி...)

இதிலிருந்து இன்றைய மத்திய அரசாங்கத்தின் மனோநிலையை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள். அதே மனோநிலையால்தான் "புலி வரப்போகிறது" "புலி வரப்போகிறது" என்று கூறி சுமார் 1 1/2 இலட்சம் படையினர் வடமாகாணத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளார்கள். கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையில் எல்லா விதத்திலும் அவர்கள் உள்ளிடுகின்றார்கள். பெண்களின் கதி பெருத்த சங்கடமாகவுள்ளது. எமது காணிகளை இராணுவத்தினர் கையேற்று அவற்றைப்பயிரிட்டு அறுவடை செய்து எமக்கே விற்கும் ஒரு நிலைதான் தற்போது நடைபெறுகின்றது. தெற்கில் இருந்து சிங்கள மீனவர்கள் வந்து படையினரின் உதவியுடன் தடுக்கப்பட்ட மீன்பிடி முறைகளில் ஈடுபடுகின்றார்கள். எம்மவர் அவற்றில் ஈடுபட்டால் பிடிததடைக்கின்றார்கள். ஏனைய காணிகளை விட ஒரேயொரு இடத்தில் மாத்திரம், அதாவது வலிகாமம் பிரதேசத்தில் இராணுவம் 6ஆயிரத்துக்கு மேற்பட்ட காணிகளைச் சுவீகரித்து தாம் நினைத்தவாறு பலாதகாரமாக அங்கு இருந்த குடியிருப்புக்களை, கல்லூரிகளை, கோவில்களை அழித்து பாரிய வாச ஸ்தலங்களையும், கொல்வ் (golf) விளையாட்டுத் திடல்களையும், நீச்சல் தடாகங்களையும் கட்டி வருகின்றனர். அங்கிருந்த மக்கள் உணவின்றி, உடுக்க உடை யின்றி, வாழ வழியின்றி எமது அனுதாபங்களில் காலத்தைக் கடத்தி வருகின்றார்கள் தற்காலிகத் தங்குமிடங்களில். இது அவர்களின் பாதிப்புக்கு மேலதிகமாக சமூக, கலாசாரச் சீரழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வாறு எமது நிலையை அடுக்கிக்கொண்டே போகலாம். எமது கருத்துக்களை வெளிப்படுத்தும் போது பலவிதமான கட்டுப்பாடுகளை நாம் உபயோகித்தே பேசவேண்டியுள்ளது. உண்மைகளைஉள்ளூரில்கூறினால் "உனக்கும் புலிகளுக்கும் தொட ர்புண்டு" என்று கூறி விசாரணைக்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

சட்டப்படி பாரிய குற்றங்களை இழைத்த முன்னைய இயக்கத் தலைவர்கள் பலர் அரசாங்க விருந்தாளிகளாக இருந்து சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். சிறிய குற்றங்களில் ஈடுபட்ட இளவயது எம்மக்கள் பலர் எத்தனையோ வருடங்கள் சிறைகளில் வாடி வாழ்கின்றார்கள். மிகவும் மனவேதனையுடன் காலத்தைப் போக்கி வருகின்றனர். அவர்களை வெளியில் எடுக்க நாம் எடுத்த பிரயத்தனங்கள் யாவும் பலனற்றுப் போயுள்ளன.

வரப்போகும் தேர்தலில் எம்மிடம் யார் தானும் வாக்களிக்குமாறு உதவி கேட்கும் நிலை ஏற்பட்டால் பல கோரிக்கைகளை முன்வைத்து அவற்றைச் செய்யுமாறு கேட்கவிருக்கின்றோம். எமது சிறையில் வாடும் இளைஞர், யுவதிகளை அப்பொழுதேனும் நாங்கள் விடுவிக்கலாமா என்று பார்ப்போம்.

மேலும் சில விடயங்களை இத்தருணத்தில் உங்கள் முன்னிலையில் கூறிவைப்பது உசிதம் என்று கருதுகின்றேன். 30,40 வருடங்களுக்கு முன்னர் அனுமதிப்பத்திரம் பெற்று போரின் போது அப்பத்திரங்களைத் தொலைத்து காணிகளில் இருந்து வெளியேறி இப்பொழுது தமது காணிகளுக்கு சென்றவர்கள் அங்கு வேறு நபர்கள் இருப்பதைக் காண்கின்றார்கள். கேட்டால் உங்களிடம் பத்திரங்கள் இல்லை. இவை அரச காணிகள். நாங்கள் திரும்பவும் அவற்றைக் கையேற்று வேறு நபர்களுக்குக் கொடுத்து விட்டோம் என்கிறார்கள்.

அநேகமாக இங்கு வந்து அகதிகளாக இருப்போர் எம் நாடு திரும்பினால் அவர்கள் கதியும் இவ்வாறே அமையப்போகின்றது. எனவே அவர்களைத் திருப்பி அழைத்து புதிய இடங்களில் குடியிருத்த இந்திய அரசாங்கம் எமக்கு உதவ வேண்டும்.

மேலும் போரினால் பாதிக்கப்பட்ட வலுவற்றவர்கள், மாற்று வலுவுடையவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்று 18ஆயிரத்திற்கும் மேலானவர்கள் இருக்கின்றார்கள். ஒரு இலட்சத்திற்குக் கிட்டிய தொகையினரான கணவனை இழந்த இளம் பெண்கள் இருக்கின்றார்கள். தாய், தந்தையரை இழந்த அநாதைக் குழந்தைகள் இருக்கின்றார்கள். வேலையற்ற இளைஞர், யுவதிகள் பலர் சில தொழில்களுக்குத் தகைமை இருந்தும், தரம் இருந்தும் தவித்து வாழ்ந்து வருகின்றார்கள்.

இன்னுமொரு பிரச்சினை உண்டு. தொழிற்றிறன் எம்மக்களிடையே குன்றியுள்ளதால் தெற்கில் இருந்து கொத்தன்மார் போன்றவர்களை வரவழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மக்களின் மனோநிலை போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனைப் போக்க வேண்டிய வைத்திய வசதிகள், ஆலோசனை கூறும் வசதிகள் எம்மிடம் இல்லை.


குழந்தைகளின் போஷாக்கின்மை மற்றொரு விடயம். இவற்றுடன் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழான வீடுகள் தேவையானவர்களுக்குக் கிடைக்காது அரசியல் சகாயம் பெற்றவர்களுக்குக் கிடைத்து வருகின்றது. தேர்ந்தெடுக்கும் முறை, தேர்ந்தெடுப்போர், வீட்டைக் கட்ட உதவும் பணம் யாவையும் நாம் வரமுன் தீர்மானிக்கப்பட்டவை. இத் திட்டமானது மக்களுக்கு நன்மை பயக்க இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது. ஆனால் ஊழல்கள் மலிந்து காணப்படுகிறது. இவற்றை நாம் எமது இந்தியத் தூதரகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.


இவை பற்றிப் பேசுவதற்காக நான் வரவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் தமிழில் பேசவேண்டும் என்றார்கள். மனதில் உள்ளதை உங்கள் முன் கொட்டித் தீர்க்கின்றேன். இதுவரை காலமும் இந்திய அரசாங்கமும் தமிழ் நாட்டின் அரசாங்கங்களும் தமிழ்மக்களின் தலைவர்களும் எமக்கு அளித்து வந்திருக்கும் உதவிகள் எமது மனமார்ந்த ஆழ்ந்த நன்றிக்கு உரித்துடையன. ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்களை பார்த்து பராமரித்து வந்ததை பாராட்டுக்குரியது. எமது மனப்பூர்வமான நன்றியறிதல்களை இது சாரபாக தெரிவிக்க விரும்புகின்றேன்.


ஆனால் நாங்கள் இங்கு பேசும் பேச்சுக்கள், உங்கள் கேள்விகளுக்கு நாங்கள் இறுக்கும் பதில்கள் எம்மை மட்டும் அல்ல எமது வடமாகாண சபையையும் பாதிக்கக் கூடும் என்பதை இங்கிருக்கும் நீங்கள் மறக்கக் கூடாது. அதாவது உணர்ச்சிபூர்வமான எமது பேச்சுக்களை வைத்து எமக்குப் பயங்கரவாத பூச்சைப் பூசி எமது வட மாகாண சபையைக் கலைக்கவும் தயங்காது எமது மத்திய அரசாங்கம். 1 1/2 இலட்சம் படை வீரர்கள் முகாமிட்டிருக்கும் இடத்தில் அவர்களை பாதிக்கும் கருத்துக்களை நாம் எடுத்தியம்பும் போது மிக்க கவனம் அவசியம். நிதானம் அவசியம். அந்த நிதானத்தை வைத்து நாம் கையாலாகாதவர்கள் என்ற கருத்தைப் பரப்பி வராதீர்கள். சூழலுக்கு ஏற்ப சூளுரைப்பதே இன்றைய சூழலில் சூரத்தனம். இல்லை என்றால் சுத்த முட்டாள் என்று பட்டம் கட்டி விடுவார்கள்.


இறுதியாக நீங்கள் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். உங்கள் உணர்ச்சிகளை நாம் புரியா தவர்கள் அல்ல. நான் அவ்வாறு புரியாத ஒருவன் என்ற மாயை யைப் பத்திரிகைகள் சில ஏற்படுத்தியுள்ளதை நான் அறிவேன். ஆனால எமக்குத் தற்போது வேண்டியது உணர்ச்சிகள் அல்ல. உதவிகள் கூட அல்ல. அதற்காக நான் உதவி வேண்டாம் என்று கூறியதாக நினைக்க வேண்டாம். உரிய சட்ட மாற்றமே முக்கியம். தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் 13ஆவது திருத்தச் சட்டமானது மேலும் திருத்தியமைக்கப்பட்டாலும் அது எமக்கு நன்மைபயக்காது. யாப்பின் அடிப்படை ஒற்றையாட்சியில் இருந்து மாற்றப்பட வேண்டும். எமது தனித்துவத்தை, சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கியதாக அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதனைக் கோர, கொண்டுவர இந்திய அரசாங்கத்திற்குத் தார்மீக உரித்து உள்ளது என்பதைக் கூறிவைக்கின்றேன். எம் சார்பிலும் தான் நீங்கள் 1987ஆம் ஆண்டின் உடன்பாட்டில் கையெழுத்திட்டீர்கள் என்பதை மறவாதீர்கள். நீங்கள் எதிர்பார்த்தவாறு எமது நிலைமை அமையவில்லையானால் எம் சார்பில் குரல் எழுப்ப உங்கள் நாட்டிற்கு உரிமையுண்டு. எமக்குப் போதிய உரித்தளிக்க எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுமாறு நீங்கள் வலியுறுத்த வேண்டும். வடகிழக்கு மாகாண மக்களிடையே கருத்துக்கணிப்பு நடைபெற வேண்டும் என்பது அந்த உடன்பாட்டின் உள்ளடக்கம். அதை உங்கள் அரசாங்கம் நடத்துமாறு கேட்கலாம். எமது நாளாந்த வாழ்க்கையை மற்றவர்களின் உள்ளீடல்கள் இன்றி நாம் வாழ இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளில் இறங்கலாம் என்று கூறி என்னைத் தமிழில் பேச வழிவகுத்த மக்கள் ஒன்றியத்தாருக்கு நன்றி கூறி அமர்கின்றேன். (இ)

(முற்றும்)












(யா/ ஹெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ.சேதுராஜாவின் மணிவிழா நிகழ்வு அண்மையில் கல்லூரிக் கலையரங்கத்தில் இடம் பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குளத்தின் நீர் திறந்துவிடப்பட்டு கிளி.குளத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது



(மருதநகர்)

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் விவசாய வயல் நிலங்களின் நீர்ப்பாசன தேவைக்காக இரணைமடு குளத்தின் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி குளத்தில் இந்நீர் விவசாய தேவையின் நிமிர்த்தம் தேக்கி வைக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள் உரியமுறையில் துப்புரவு செய்து புனரமைக்கப்படாமையால் இந்நீரினை திறந்து விடுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களமும் கமக்கார அமைப்புக்களும் இணைந்து தற்போது இக்கால்வாய்களை துப்புரவு செய்து புனரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது பெய்துள்ள மழை பெரும்போக நெற்செய்கை செய்வதற்கு போதுமானதாக இல்லையென விவசாயிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனாலும் பருவ மழை போதிய அளவு பெய்யாமையால் தொடர்ந்து வரட்சி நிலை நீடிப்பதால் இம்முறை வயல் நிலங்களில் விதைக்கப்பட்டுள்ள நெல்மணிகள் மூலம் அறுவடை காலத்தில் கூடிய விளைச்சலை பெற முடியாத சாத்தியம் தென்படுவதாக விவசாயிகள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-285)

இது தொடர்பான செய்தி வலம்புரி பத்திரிகையில் நேற்று முன்தினம் ''இரணைமடு குளத்தின் நீரை விவசாய நடவடிக்கைக்கு திறந்து விடுங்கள்'' எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டுபாடசாலைமாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் மேற்படி பிரதேச சபை செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**கதை சொல்லல்**

த.கவிபிரியா (கிளி/முகாவில் அ.த.க. பாடசாலை), ஈ.மதுசா (கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்), செ.கனிசெல்வி (கிளி/தர்மகேணி அ.த.க. பாடசாலை)

**சொல் கோர்த்தல்**

வே.சண்சிகா (கிளி/பளை இந்து ஆரம்பவித்தியாலயம்), நா.தரஞ்சன் (கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை), வ.தேன்நிலவன் (கிளி/மாசார் அ.த.க.பாடசாலை)

**திருக்குறள் மனனம்**

பி.உசாளினி (கிளி/சோரன் பற்று கணேசா வித்தியாலயம்), அ.சுகானுஜன் (கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்), தி.ஜனுசா (கிளி/சோரன்பற்று கணேசா வித்தி

**வர்ணம் தீட்டுதல்**

ஸ்ரீ.கோகுலராஜ் (கிளி/தர்மக் கேணி அ.த.க.பாடசாலை), அ.சாருஜன் (கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை), சி.திருநிலா (கிளி/முகமாலை றோ.க.த.க.பாடசாலை)

**பேச்சு போட்டி**

இ.நர்மதா (கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை), வ.மேரிசுதர்சினி (கிளி/சோரன்பற்று கணேசா வித்தி), றோ.மேரிகெண்டிசா (கிளி/பளை றோ.க.த.க.பாடசாலை)

**பொது அறிவுப் போட்டி**

ஜெ.அறிவரசன் (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை), கி.பவித்திரன் (கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை), த.டெனீஷியன் (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை)

**பொது அறிவு வினாவிடை போட்டி**

கிளி/மாசார் அ.த.க.பாடசாலை, கிளி/பளை மத்திய கல்லூரி

**கட்டுரைப்போட்டி**

மா.அருள்ஸ்ரீபன் (கிளி/பளை மத்திய கல்லூரி), த.கஜானி (கிளி/பளை மத்திய கல்லூரி), தி.சுலக்சினி (கிளி/மத்திய கல்லூரி) (2-254)





கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம்பிற்பகல் 2.30மணியளவில்கரைச்சிபிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளியினை பெற்ற மாணவனுக்கு பதக்கம் அணிவிக்கப்படுவதையும் தேசிய மட்ட ரீதியில் நடைபெற்ற விநாடி வினாப்போட்டியில் வெற்றியீட்டிய மூத்தோருக்கான பரிசில் வழங்கப்பட்டதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-சிவநகர் செய்தியாளர்)

# ரி-56 ரக துப்பாக்கி ரவைகளை வைத்திருந்தவர் விளக்கமறியலில்

ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 325ஐ வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா, நேற்று முன்தினம் உத்தரவிட் டார.

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீராவிப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு பிரதேசத்திலுள்ள வயலில் இருந்து துப்பாக்கி ரவைகளை எடுத்துள்ள இவர், நீராவிப்பிட்டியிலுள்ள தன்னுடைய வீட்டில் அவற்றை வைத்திருந்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, அவ்வீட்டை சோதனை செய்த பொலிஸார், அங்கிருந்து ரவைகளை கைப்பற்றியதுடன், சந்தேகத்தின் பேரில் குறித்த நபரை நேற்று முன்தினம் காலை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர.

இதன்போதே சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.(2)

# 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(முள்ளியவளை)

சிறுமியைக் கடத்திச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட குடும்பஸ்தரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார்.

பேராறு ஒட்டுசுட்டானைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியை கடந்த 8 ஆம் திகதி வேலைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 27 வயதுடைய மூன்றுபிள்ளைகளின் தந்தை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சந்தேக நபரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(2-300)

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான மேலதிக கடுகதி புகையிரத சேவை நாளை மறுதினம் ஆரம்பம்

## புகையிரத திணைக்களம் தெரிவிப்பு

(மல்லாவி)

புகையிரத திணைக் களத்தினால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கிடையிலான புகையிரத சேவையில் பயணிகளின் நன்மை கருதி மேலதிக சேவையொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக புகையிரத திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இரவுநேரதபால்புகையிரத சேவையின் போது பயணிகளின் தொகை அதிகரித்துகாணப்படுவதனால்நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கடுகதி புகையிரதம் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான இப்புகையிரதத்தின் சேவையானது வாரம்தோறும் திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே நடைபெறும்.

மேற்படி கடுகதி புகையிரதமானது வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடையில் ஏழு புகையிரத நிலையங்களில் மட்டும் தரித்து நின்று பயணத்தைத் தொடரவுள்ளது.

முறையே வவுனியா, கிளிநொச்சி, பளை, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்ப்பாணம் ஆகிய புகையிரத நிலையங்களில் மட்டும்தரித்துநின்றுசெல்லவுள்ளது.

கொழும்பிலிருந்து இரவு 10 மணிக்கு ஆரம்பமாகும் இச்சேவையானது மறுநாள் காலை 6.55 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடையும்.

இப்புகையிரதத்திற்கான பயணக் கட்டணங்களாக சாதாரண புகையிரத சேவைக்குரிய கட்டணங்களே அறவிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கான இக்கடுகதி புகையிரதத்தின் சேவையானது ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை ஆகிய 3 தினங்களும் தினமும் இரவு 8.40 மணிக்கு புறப்பட்டு வழமையாக தரித்து நின்று கொழும்பினை மறுநாள் அதிகாலை 5.30மணிக்கு சென்றடையவுள்ளது.

இப்புகையிரதத்தில் 3 ஆம் வகுப்பு சாதாரணதரத்தைச் சேர்ந்த 4 பெட்டிகளும் 3 ஆம் வகுப்பு ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்காக ஒரு பெட்டியும் இரண்டாம் வகுப்பில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்காக இரு பெட்டிகளும் இரண்டாம் வகுப்பு சாதாரணதரத்தைச் சேர்ந்த இரு பெட்டிகளும்பயணிகளுக்காக இணைக்கப்படவுள்ளதாகபுகையிரததிணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# காண்பிய கண்காட்சி

(மருதநகர்)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் "தூரிகையின் வீச்சு" எனும் தொனிப் பொருளில் "காண்பிய கண்காட்சி" இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குபாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் கற்புல படைப்புக்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எனவே ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அருமையுடைய செயலாற்றிப் பெருமை பெற்றவர் நம் குருக்கள் ஐயா அவர்கள்"



எவராலும் எட்ட முடியாத உயரத்தைத் தம் செயல்களாலும் அருட்பணிகளாலும் சேவையாலும் கிரியைகளாலும் எட்டிப்பிடித்தவர் நம் அதி வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ. மகேஸ்வரக்குருக்கள் ஐயா அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் புண்புடைமை என்னும் வழக்கு என்பதை உணர்ந்து பண்புடையவராய் வாழ்ந்து எண்பதை எட்டிநிற்கும் அருளாளர் அவர்.

1935ஆம் ஆண்டு புனர்பூச நட்சத்திரம் கூடிநின்ற சுபவேளையில் பிறந்த ஐயா தம் ஆரம்பக் கல்வியை நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித்தியாலயத்திலும் பின்னர் யாழ். மத்திய கல்லூரியிலும் பெற்றார். தம் உயர் கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றார். பாரம்பரிய குருகுலக் கல்வியை புகழ்பூத்த கோண்டாவில் நாரா யண சாஸ்திரிகள் யாழ்ப்பாணம் சீதாராம சாஸ்திரிகள், நயினாதீவு ஐ. கைலாசநாதக்குருக்கள் என் போரிடம் பெற்றுச் சிறப்புற்றார்.

தம் உயர்கல்வியைநிறைவுசெய்து கொண்டு ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சங்க உதவிக் காசாளராகவும் உதவி முகாமையாளராகவும் பணி புரிந்தார்.

1962 ஆம் ஆண்டில் இல்லறம் அல்லது நல்லறம் அன்று என சுதுமலை அம்பாள் ஆலயக் குருவாக விளங்கிய தியாகராசா ஐயரது பொற்புடைய மகள் சீதாலக்ஷ்மி அம்மாவைத் திருமணம் புரிந்தார். அன்பும் அறனும் உடைத்தாய இவர் தம் இல்வாழ்வின் பயனாக நதிசுத சர்மா, பாலகைலாசநாதசர்மா, காதம்பரி நன்மக்களைப் பெற்றனர்.

நதிசுதசர்மா ஜெந்தகலா என்னும் பெண்ணின் நல்லாளை மணந்து மனஸ்வினி, நிஷேவிதா என்னும் மக்கட் செல்வங்களைப் பெற்றார். பாலகைலாசநாதசர்மா மஹாலஷ்மி என்னும் திருவுடையாளை மணந்து மஹேஸ்வரநாதசர்மா, சுப்பிரமணிய நாதசர்மா என்னும் இருமல்ர்களைப் பெற்றுள்ளார். மகள் காதம்பரி சர்வேஸ்வரக்குருக்களை மணந்து தேஜோவதன சர்மா என்னும் ஏகபுத்திரனை பெற்றெடுத்தார். இம்மக்கள்மூவரும்தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள் தத்தம் வினையான் வரும் என்பதற்கேற்ப தந்தை வழி நின்று பணி புரிகிறார்கள்.

1948 ஆம் அண்டு சிதம்பரம் (தமிழ்நாடு)ஆலயத்தில் உபநயனம் பெற்ற ஐயா 1965 ஆம் ஆண்டில் நயினாதீவு ஸ்ரீநாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ.கைலாயநாதக்குருக்களால் ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பெற்று குருக் கள் பட்டம் பெற்றார். அடுத்தவருடம் (1966) சுதுமலை -புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் முதன்முதலாக மஹோற்சவ குருக்களாய் அமர்ந்து சிறப்பாக மஹோற்சவத்தை நடத்திப் பாராட்டப் பெற்றார்.

குருக்கள் ஐயாவின் சமய நிகழ்வுகளை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

- நூற்றுக்கு மேற்பட்ட மஹா கும்பாபிஷேகங்களை பிரதம குருவாக அமர்ந்து நடத்தியுள்ளார்.
- ஆயிரம்கும்பாபிஷேகங்களில் பங்காற்றியுள்ளார்.
- பிரதம குருவாக விளங்கி 250 மஹோற்சவங்களைநடத்தியுள்ளார்.
- குறிப்பாக 2010ஆம் ஆண்டு நயினாதீவு அம்மன் ஆலயத்திலும்
- சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 1981-2012 வரையும்
- நல்லூர்கந்தசுவாமிகோயிலில் 1983 இலும்
- நயினாதீவு ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோயிலில் 1985-2012 வரையிலும்
- இன்று ஐம்பது வருடங்களாக சிவாச்சாரியப் பணிபுரிந்து மேலும் பல இடங்களில் மஹோற்சவங்களையும் நடத்திப் பெரும் புகழ் பெற்றார்.
- வெளிநாட்டில் கனடா றொரன்டோ ஸ்ரீதுர்க்கை அம்மன் கோயிலில் ஸ்ரீசக்கர பிரதிஷ்டையும் மண்டலாபிஷேகப் பூர்த்தியையும் பக்தி பூர்வமாக நடத்திப்பாராட்ப்பெற்றார்.

இவரது கல்விப் பணியும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். சுதுமலை அம்மன் கோவிலில் 1995 இல் இவரது ஷஷ்டியப் பூர்த்தி விழாவின் போது ஸ்ரீசக்கர பூஜா பத்ததி நூல் இலவசப் பிரதியாக வெளியிட்டு அளிக்கப்பட்டது. 2009 இல் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் லகு ஸ்ரீ சக்கரா பூஜா பத்ததி நூல் இலவசமாக வெளியிட்டு வழங்கப்பட்டது.

சமயப் பணிகளால் சிறப்புற்ற குருக்கள் ஐயா புரிந்த சமூகப் பணிகளும் குறிப்பிடத்தக்கவை. 1992 முதல் 2002 வரை சர்வதேச குருமார் ஒன்றியத் தலைவராகவும் 2003 தொடக்கம் 2006 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் செயலாற்றிய இவர் 2005 தொடக்கம் இன்று வரை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகவும் விளங்குகின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு தாம் மேற்கொண்ட துறைகளில் புகழ்பூத்த இவர்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலான்

தோன்றலில் தோன்றாமை நன்று

என்றபடி தாம் தோன்றிய துறைகளில் எல்லாம் புகழ் பெற்றார். அதனால் பின்வரும் பட்டங்களும் விருதுகளும் அவருக்குக் கிடைக்கப் பெற்றன.

- 1979 இல் சுன்னாகம் பிராசீன பாடசாலைசீதாராமசாஸ்திரிகள்தலைமையில் கிரியாகலாப முக்தாமணி என்னும் பட்டத்தை வழங்கியது.
- 1989 இல் வவுனியா பிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேகத்தின் போது ஆகம வித்தகர் என்னும் பட்டம் சூட்டப்பட்டது.
- 1995 இல் இணுவில் காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுலம் கிரியா தத்துவநிதி என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.
- 2011 இல் கலாநிதி ஏ.ஜி. ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்-சரகமலசாரங்க வித்யாபாரங்க தவிசாரதா என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார்.
- 2010 இல் சுதுமலை அம்மன் கோவில் மஹோற்சவ பூங்காவனத் திருவிழாவின் போது கிரியா கலாபபாரதி என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.
- 2013 இல் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் ஆண்டு தினவிழாவில் மூத்த சிவாச்சாரியார் எனப் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறெல்லாம் சீரும் சிறப்பும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமென விளங்கும் குருக்கள் ஐயா தம்பதியின் அமுதவிழா (80 ஆம் ஆண்டு) வின் போது சீதா மகேஸ்வரம் சதாபிஷேக சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

அத்துடன் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் திருமால் பாயிரம், அம்மன் 108 நாமங்கள் தமிழ் விளக்கங்களுடன் வெளியிடப்படுகின்றது. இந் நூல்கள் ஐயாவை என்றும் மனங்கொண்டு போற்ற உதவுமென நம்பலாம்.

எங்கள் அதி வணக்கத்துக்கும் அன்புக்கும் உரியவரான சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் ஐயா தமது தள்ளாத வயதிலும் நலமே வாழ்ந்து நற்பணி புரிய எல்லாம் வல்ல அம்பிகை பேரருள் புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டிதர்
க.ஈஸ்வரநாதப்பிள்ளை
இளைப்பாறிய ஆசிரியர்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

# கோர விபத்து 50 பேர் பலி!

## பாகிஸ்தானில் பயங்கரம்



(இஸ்லாமாபாத்)

பயணிகள் பேருந்தும் உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங்கலாக 50 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்த கோர விபத்துச் சம்பவம் ஒன்று பாகிஸ்தானில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியு ள்ளது.

சிந்து மாகாணத்தின், சுக்கார் மாவட்டத்தில் வீதியில் பயணிகளுடன் சென்ற பேருந்து எதிரே வந்த உழவு இயந்திரத்துடன் மோதியது. இந்த விபத்தில் 50 பேர் பலியாகினர்.

இதில், 8 பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவார்கள். சுமார் 20க்கும் மேற்பட்டோர்கள் காயம் அடைந்தனர் என்று பொலிஸ தரப்பில் தெரிவிக்கப் பட்டுள் ளது.

காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பேருந்து வேகமாக சென்றபோது, ஓட்டுநர் தூங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் பேருந்து சுமார் 80 பேருடன் சுவாத்தில் இருந்து கராச்சி நோக்கி சென்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகிறது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு சிந்து மாகாண ஆளுநர் இஷ்ரத் இபாத் இரங்கல் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 |
| தக்காளி | 140 | 110 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 160 | 150 | 160 |
| பூசணி | 40 | 30 | 50 |
| புடோல் | 70 | 90 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 160 |
| பாகற்காய் | 200 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 160 |
| பயற்றங்காய் | 140 | 150 | 250 |
| லீக்ஸ் | 280 | 250 | 140 |
| பீற்றூட் | 100 | 120 | 240 |
| கறிமிளகாய் | 160 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 250 | - | - |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 57 வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

(10.11.2014)



## கௌரவ அமைச்சர்
## கே.என்.டக்ளஸ் தேவானந்தா
### (பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

இருளில் மூழ்கிய எமது கிராமத்திற்கு ஒளிவிளக்கு ஏற்றிவைத்த ஈடு இணையற்ற தலைவன் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் 57ஆவது பிறந்தநாளை மனமார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:- மருதமலை முருகன் க.கூ.சங்கம், மருதமலை முருகன் கிராமிய அமைப்பு, மருதமலை முருகன் ஆலய பரிபாலன சபை, மருதபுரம் கிராம அபிவிருத்தி சங்கம், மருதபுரம் சனசமூக நிலையம், கலைத்தென்றல் விளையாட்டுக்கழகம், மருதபுரம் மாதர் சங்கம், மருதமலை முருகன் முன்பள்ளி, அனைத்து மருதபுரம் வாழ் மக்கள்.**

(சி-9037)

சிவகௌரி கடற்றொழிலாளர் கூ.சங்கம்
சிவகௌரி சிக்கன க.வ.கூ.சங்கம்
சிவகௌரி கிராமிய அமைப்பு
சிவகௌரி சனசமூக நிலையம்
பெரியமணல் கிராம அபிவிருத்தி சங்கம்
பெரியமணல் மாதர் கிராம அ.சங்கம்
சிவகௌரி விளையாட்டுக்கழகம்
**பெரிய மணல், காரைநகர்**

பிட்டியெல்லை கிராம அபிவிருத்திச் சங்கம்
பிட்டியெல்லை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
பிட்டியெல்லை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
தோப்புக்காடு கிராம அபிவிருத்தி சங்கம்
தோப்புக்காடு முன்பள்ளி
தோப்புக்காடு விளையாட்டுக்கழகம்
நெய்தல் கிராம அபிவிருத்தி சங்கம்
நெய்தல் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்
கல்வந்தாழ்வு கிராம அபிவிருத்தி சங்கமும் மக்களும்
கல்வந்தாழ்வு முன்பள்ளி
இளஞ்சோலை விளையாட்டுக்கழகம்
ஆறுமுகம்பிள்ளை மாணிக்கம்

வேலை பெற்றுக்கொண்டவர்கள்
குணரத்தினம் தர்ஷன்
விக்கினேஸ்வரன் ரகுபரன்
யேசுராசா கோமளேஸ்வரி
ஜெயக்குமார் வசந்தகலா
விஸ்வநாதன் குகநேசன்
கணேசபிள்ளை குமரேசன்
சற்குணம் தினேஷ்வரன்
சிவபாலசுந்தரம் புஸ்பகாந்
யோகேஸ்வரன் சாந்தரூபன்

சமுர்த்தி
உத்தியோகத்தர்கள்,
காரைநகர்,
அனைத்து-காரைநகர்
மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமுதாயத்திற்கென நல்லவற்றை சாதிக்கத் துடிக்கும் மனிதனுக்கு களைப்பாற நேரம் ஏது?

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாதவி எறிந்த மாலை கோவலன் கழுத்தில் விழுந்த காதை

நடனமாதுவாகிய மாதவிக்கும் கோவலனுக்கும் எவ்வாறு பந்தம் ஏற்பட்டது என்பது குறித்து செவிவழிக் கதையொன்று உண்டு.

நடனமாடி நிற்கும் மாதவி ஒரு கழுத்து மாலையை எடுத்து சபையோர் மத்தியில் எறிகிறாள். மாலை யாருடைய கழுத்தில் விழுகிறதோ அவனைத் திருமணம் செய்வதென்பது நியதி.

இந்த நியதியோடு மாதவி எறிந்த மாலை கோவலனுடைய கழுத்தில் விழுகிறது. கெடுகாலம்; கழுத்து மாலை உருவில் கோவலனிடம் வருகிறது. ஏற்கெனவே அறிவித்த நிபந்தனையின் படி கோவலன் மாதவியைத் திருமணம் செய்கிறான்.

முன்னதாக கண்ணகியைத் திருமணம் செய்த கோவலனின் கழுத்தில் மாலை விழுந்த போது அவன் தாளாத புளகாங்கிதம் அடைந்தான்.

ஆனால் தன் கழுத்தில் விழுந்த மாலைதான், தன் கழுத்து வெட்டப்படுவதற்குக் காரணம் என்பதை அவன் அப்போது அறிந்திலன்.

மாலை விழுகிறது என்பதற்காக அது நல்ல சகுனம் என்று நினைத்து விடக்கூடாது என்பதற்கு கோவலனின் காதை நல்ல உதாரணம்.

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையும் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடலாம் என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மூன்றாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் மற்றும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் தெரிவித்திருந்த நிலையில்,

மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டிட முடியுமா? என்பதை அறியும் பொருட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தின் கருத்தை கேட்டிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷவிற்கு விளக்கம் அனுப்பி வைத்த உயர் நீதிமன்றம், மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்று அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் மேற்படி அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டது என்பதால் அந்தச் செய்தி எந்தவிதமான பரபரப்பையும் ஏற்படுத்தாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

அதேநேரம் மூன்றாவது தடவையும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்தின் மறுபக்கம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்ற தீர்ப்பை வழங்குவதாக இருக்கும்.

உயர் நீதிமன்றம் அளித்துள்ள விளக்கத்தின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், உயர் நீதிமன்றம் ஜனாதிபதி மகிந்தவுக்கு அளித்த விளக்கம் கோவலன் கழுத்தில் விழுந்த மாலையாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க அல்லது கரு ஜெயசூரிய அல்லது சஜித் பிரேமதாஸ என்பவர்களில் யார் போட்டியிட்டாலும் அவர்களின் வாக்குப்பலம் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியே தீர்மானிக்கும்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க பொது வேட்பாளராகப் போட்டியிட்டால் ஐ.தே. கவின் வாக்குப்பலத்துடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்ந்தவர்களில் ஒரு பகுதியினரின் வாக்குப்பலமும் சந்திரிகாவை வந்தடையும்.

ஆக, 3-வது முறையாகவும் போட்டியிடலாம் என்று விளக்கம் தாராமலிருந்தால் எங்களுக்கு இந்தக்கதி வந்திருக்காது என்று வருந்துகின்ற நிலைமையும் ஏற்படலாம்.

# தலைமைத்துவ பயிற்சியில் ஈடுபட்ட மாணவி வைத்தியசாலையில் அனுமதி

## 7 அடி சுவரிலிருந்து குதித்தாராம்

தலைமைத்துவப் பயிற்சியின் போது பல்கலைக்கழக மாணவியொருவர் படுகாயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலயில் சிகிச்சை பெற்று வருவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வி.கே.டி.ஆர். கௌசல்யா என்ற மாணவியே படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கலத்தேவ இராணுவ முகாமில் சுவர் அளவிடும் பயிற்சி இடம்பெற்றுள்ளது.குறித்த மாணவி 7 அடி உயரம் கொண்ட சுவரின் மேல் இருந்து கீழே குதித்தபோது உபாதைக்கு உள்ளாகியதாகவும் அவரது இடுப்புப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் நஜித் இந்திக்க தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த மாணவியின் முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் உறுதி செய்துள்ளதாகவும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவ பயிற்சியில் கண்டி - கன்னொருவ இராணுவ முகாமில் மாணவி ஒருவர் இராணுவ வீரரால் வல்லுறவுக்கு உட்படுததப்பட்டதாகவும் இந்த சம்பவத்தை அரசாங்கம் மூடிமறைத்ததாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள், பெற்றோர்கள், விரிவுரையாளர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசியல் தேவைக்காக அரசாங்கம் மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி அளிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பயிற்சி மூலம் மாணவர்களின் உயிருக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைத்துவ பயிற்சி இரண்டு மாணவர்களின் உயிரை பலியெடுத்துள்ள நிலையில் பாலியல் வல்லுறவு, உபாதைக்கு உள்ளாதல், இராணுவ புலனாய்வுப் பிரிவினரை பல்கலைக் கழகத்திற்குள் நுழைதல் போன்றவை அரசாங்கத்தின் தேவைக்காகவே இடம்பெறுவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் நஜித் இந்திக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.(இ-5)

## கருத்தரங்கு

யாழ்.மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை இறுதி நிலைப் பரீட்சை தொடர்பான கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்.பருத்தித்துறை ஆனைப்பந்தியிலுள்ள குருகுல மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் அறநெறிப் பாடசாலை இறுதிநிலைப் பரீட்சைக்கு விண்ணப்பித்து தோற்றவுள்ளவர்கள் கலந்து கொண்டு பயனடைய முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(இ-7)

## கண்ணனின் லீலைகள் ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வருகின்ற ஆன்மீக சொற்பொழிவின் தொடர்ச்சியாக எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்ணனின் லீலைகள் எனும் விடயம் தொடர்பாக இரா. சண்முகசுந்தரம் ஆன்மீக சொற் பொழிவு ஒன்றினை ஆற்றவுள்ளார். (இ-7)

## மதுபானம் விற்றவர் கைதாகிப் பிணை

வடமராட்சியில் சட்ட விரோதமான முறையில் மதுபானத்தை விற்பனை செய்து வந்த நபரொருவர் 5 ஆயிரம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி இராஜ கிராமம் பகுதியில் வசிக்கும் மேற்படி நபர் மதுபானத்தை சட்டவிரோதமான முறையில் தொடர்ச்சியாக விற்பனை செய்து வந்துள்ளார்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் மேற்படி நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் மேற் கொண்ட விசாரணையின் பின்னர் மேற்படி நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டுள்ளது. (இ-7-ஞ)

## வட மாகாணத்திலுள்ள கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் உருவாக்குதல்

வடக்கு மாகாணத்தின் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்வி பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் கீழ் உழைப்பு பட்டதாரிகள் (ஏற்கெனவே அரச சேவையில் இருக்கின்ற ஆனால் பட்டதாரிக்குரிய சம்பளம் மற்றும் ஏனைய சலுகை உரிமையை பெற்றுக்கொள்ளாதவர்கள்) சங்கம் உருவாக்குதல் தொடர்பாக நிர்வாக சபை தெரிவு இடம் பெறவிருப்பதனால் அனைத்து கீழ் உழைப்பு பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கீழ் உழைப்பு பட்டதாரிகளின் சேவைக் காலத்துடன் பட்டதாரி நியமனத்திற்குள் உள்ளீர்ப்பு செய்வதற்கு மற்றும் ஏனைய விடயங்கள் (சம்பள கொடுப்பனவு) தொடர்பாகவும் கலந்துரையாடப்பட இருப்பதால் மேற்கூறப்பட்ட ஐந்து மாவட்டங்களினதும் கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து கொள்ள விரும்பும் பட்டதாரிகள் கீழ் வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள், 0715222288-ஏ.சுகந்தன் (மன்னார், கிளிநொச்சி), 0777040198-ஆர். அருள்நேசன் (யாழ்ப்பாணம்), 0771864710-எஸ். தீபன்(வவுனியா, முல்லைத்தீவு)

ஆகியோரின் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (இ)

## இன்னிசைக் கச்சேரி

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகநிகழ்வு தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் யோ. ஜெகஆனந்தம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவியும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியருமான வைத்திய கலாநிதி திருமதி பிரதீபனா செல்வகரனும், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"சுவர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்"

*-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)*

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தர்மத்தைக் கடைப்பிடி



✦ பிறரிடம் கைநீட்டி யாசிக்கும் போது, உன்னை நீயே தாழ்மைப்படுத்துகிறாய்.

✦ தர்ம வழியைக் கடைபிடித்து வாழ்பவன், மற்றவர் கூறும் பழிச்சொல்லை பொருட்படுத்த தேவையில்லை.

✦ மனிதன் கோபத்தில் அறிவை இழந்து உணர்ச்சி வயப்பட்டு கடுஞ்சொற்களைப் பேசுகிறான்.

✦ கடவுளிடம் முழுமையாகச் சரணடைந்து விட்டவன், வாழ்வில் ஒருபோதும் தளர்ச்சி உண்டாவதில்லை.

✦ தீவிர நம்பிக்கை இருக்குமானால், நீ மனம் உருகித் தேடும் பொருள் இருக்குமிடத்திற்கே உன்னைத் தேடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இறுதி அஞ்சலிகள்




நேசித்து வாசித்து
தமிழை சுவாசித்த
நீதிபதி
விகடகவி
மு.திருநாவுக்கரசு
இப்போது
சுவாசிக்க சுவாசம்
இல்லாவிட்டாலும்
நேசிக்க உங்கள்
நினைவுகள் இருந்தால் போதும்
நம் தமிழ் சமூகம் உயிர்வாழ....
நேசனுடன் நெருக்கமான அரசியல்
சமூக சட்டவியல் உறவுகளை
நீங்காத நினைவுகளாய்
விட்டுச்சென்ற தங்களுக்கு
எமது இறுதி அஞ்சலிகள்.



தோற்றம்
01-04-1939
மறைவு
09-11-2014

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குனர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
தேசிய பிரபல பயண ஒழுங்கமைப்பு நிறுவனம்
NATION POPULAR TRAVELS & TOURS
128 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## உடனடி வேலைவாய்ப்பு

எதிர்காலத்தில் நிரந்தர தொழில் வாய்ப்பினை பெற வேண்டுமா? இன்றே அழையுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உள்ள நவீன தொழிற்சாலைகளான ஜேம்/டொபி/கோடியல்/சொக் லேட்/யோக்கட்/பால்மா/கிளவுஸ்/ டிபிடிபி/டயர்.... போன்றவற்றில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/Loading/Unloading போன்ற பிரிவுகளுக்கு உடனடியாக 18-50 வயது ஆண்,பெண்தேவை சம்பளம் 18000/=, 22000/=, 32000/=வருகை அன்றே வேலைக்கு செல்லலாம்.

(சி-9036) 077 683 8231 / 077 111 6770

## விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை, பருத்தித்துறை 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்.



இராகவன் ராகுல்
164 புள்ளிகள்





ஜெயபாலன் நூதனி
163 புள்ளிகள்

**100 இற்கு மேல் புள்ளிகள் பெற்ற ஆறு மாணவர்கள்**

பி.நிவேதிகா- 148, ந.டிலெக்ஷிகா - 139, கு.ஜென்சி-134,
ச.யதுர்சன்- 127, வி. நிவிர்தா- 117, இ. துவாரகா- 115

இவர்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டி மேலும் பல தேர்ச்சிகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம். இவர்களுக்கு ஊக்கமும் வழிகாட்டலும் வழங்கிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(8286)

**பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம்,**
**யா/ புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை, பருத்தித்துறை.**

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் முத்தையா திருநாவுக்கரசு



ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி அவர்கள் இயற்கை எய்திய செய்தியை வலம்புரி வாயிலாக கண்டு கண் கலங்கி விட்டோம். அன்னாரின் இழப்பினால் துயரக் கடலில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றோம்.

(சி-9035)

ஆ. வடிவேலு- (ஓய்வு நிலை அதிபர் குடும்பத்தினர்)
ஆ. மகேசு (ஓய்வுநிலை அதிபர் குடும்பத்தினர்)

தும்பளை,
பருத்தித்துறை.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 28 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2022 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 21 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/3067 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 27 1/2<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: AIB/ வங்கி உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/2023 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 25 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3074 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 7 1/2 சூரிசெவ்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: O/L/ அரச தொழில<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/2025 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 11 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/3075 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 81 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/ உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/2026 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 35 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3076 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோனி வீட்டிலே குவா குவா சத்தமாம்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக உள்ள தோனி விரைவில் தந்தையாகப் போகிறார்.

தோனிக்கும், சாக்ஷிக்கும் இடையே 2010, யூலை 4 ஆம் திகதி திருமணம் நடைபெற்றது. இதனையடுத்து நேரம் கிடைக்கும் போது எல்லாம் சாக்ஷி கர்ப்பமாக இருக்கிறார் என ரசிகர்கள் எதையாவது அவிழ்த்து விடுவார்கள்.

அப்படி நல்ல விடயம் நடந்தால் நானே சொல்கிறேன் என்று சாக்ஷியும் அடிக்கடி தெரிவிப்பார்.

இந்நிலையில் தோனி குடும்பத்தில் குவா... குவா சத்தம் விரைவில் கேட்கப் போகிறது என வட இந்திய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

ஏற்கெனவே, தோனி இலங்கைக்கு எதிரான நடப்பு ஒரு நாள் போட்டிகளில் விளையாடாமல் ஓய்வெடுத்து வருகிறார்.

மகிழ்ச்சி செய்தி தந்த மனைவியுடன், பொழுதை கழிக்கவே தோனி கிரிக்கெட் தொடரில் இருந்து ஒதுங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

எது எப்படியோ, சென்னை அணியின் தலைவராக உள்ள தோனிக்கு குழந்தை பிறந்ததும், சின்ன தல பிறந்ததற்கு பெரிய விசில் அடிங்க என அந்த குழந்தையை தங்கள் அண்ணன் குழந்தையாக நினைத்து விசில் போட ஆரம்பித்து விடுவார்கள் தமிழக ரசிகர்கள். (க)

# பாகிஸ்தான் ஆதிக்கம்



நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வலுவான நிலையில் உள்ளது.

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அபுதாபியில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அகமட் ஷெசாத், யூனிஸ் கான், மிஸ்பா உல் ஹக் ஆகியோரின் சதங்களால் தனது இன்னிங்ஸை 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 566 ஓட்டங்கள் குவித்திருந்தபோது இடைநிறுத்தியது

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 15 ஓட்டங்கள் எடுத்திருந்தது. லாதம 5, மக்கலம் 9 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 3-வது நாள் ஆட்டம் தொடங்கியது. அணித் தலைவர் மக்கலம் 18, அதன்பின் வந்த வில்லியம்சன் (3), ரெய்லர் (0) என சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

ஒருபுறம் விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும், மறுமுனையில் பொறுப்பாக விளையாடிய லாதம் சதம் அடித்து 103 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். பின்வரிசையில் பிஜே. வோட்லிங் 38 ஓட்டங்கள் எடுத்து வலு சேர்க்க நியூசிலாந்து 262 ஓட்டங்களை எடுத்து பாலோ ஒன் ஆனது.

ஆனால், பாகிஸ்தான் பாலோ ஒன் கொடுக்காமல் 304 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர்களாக மொகமட் ஹபீஸ், அசார் அலி களம் இறங்கினர்.

இந்நிலையில் நேற்றைய 3-வது நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது பாகிஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி 15 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஹபீஸ் 5, அசார் அலி 9 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

இன்று போட்டியின் 4 ஆவது நாள் ஆட்டமாகும். (க)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்

**இராமசாமி நிருஜன்**

16.10.2014 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவின் போது National Diploma in Teaching Maths பட்டம் பெற்றுள்ளார்.





செல்வி

**இராமசாமி விஜிதா**

10.11.2014 யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் இடம்பெற்ற 30-வது பட்டமளிப்பு விழாவின் போது மருத்துவமானி (MBBS) பட்டம் பெற்றுள்ளார்.

இவர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வராகி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

வாழ்த்துவோர்: அம்மம்மா, தாத்தா, மாமா, மாமி

(சி-9048)


## டிப்பர் வாகன...

இச்சம்பவத்தில் முழங்காவிலைச் சேர்ந்த புஸ்பராசா சுகிர்தா (வயது 21) என்ற யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் வற்சலா (வயது21) என்பவர் படுகாயமடைந்தார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி அறிவியல் நகரில் நடைபெற்ற ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் நேர்முகத் தேர்வுக்காக குறித்த இரு யுவதிகளும் முழங்காவிலிருந்து புறப்பட்டுள்ளனர்.

பின்னர் கிளிநொச்சியிலிருந்து திருமுறிகண்டி நோக்கி சிற்றூர்தி ஒன்றில் புறப்பட்டு 246 ஆவது மைல்கல் பகுதியில் இறங்கி வீதியின்மறுபக்கத்துக்கு செல்ல முற்பட்டுள்ளனர். இதன்போது வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் அவர்களை மோதித் தள்ளியுள்ளது.

இதன்போது ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த மற்றைய யுவதி பொதுமக்களின் உதவியுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

உடனடியாக சம்பவஇடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் டிப்பர் வாகனச் சாரதியை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-2-15-250-263-271-277)

## ரணில்...

மைத்திரி விக்ரமசிங்கவும் சுனேத்திரா பண்டாரநாயக்கவும் கடுமையாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரினதும், ஐக்கிய தேசியக் கட்சியினரினதும், ஆதரவை திரட்டக்கூடியவர்கள்,

அத்துடன் சிறுபான்மையினரிடம் வாக்குகளுக்காக கோரிக்கைகளை விடுக்கக் கூடியவர்கள், அத்துடன் பெண்கள் மத்தியிலும் அவர்கள் இருவரும் வாக்குகளை சேகரிக்கக் கூடியவர்கள்.

இந்தநிலையில் குறித்த இருவரும் நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் பதவிக்கு வந்து 6 மாத காலப் பகுதிக்குள் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பது என்று இணக்கம் வெளியிட்டுள்ளனர். (எ-11)


## யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை

**135-வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்**

காலம் :- இன்று (12.11.2014) புதன்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி
இடம் :- பாடசாலை பிரதான அரங்கு

**தலைவர்**
திரு.தி.இரவீந்திரநாதன் அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
திரு.S.தட்சணாமூர்த்தி அவர்கள்
(யாழ்.இந்திய துணைத் தூதுவர்)

**சிறப்பு விருந்தினர்**
திரு. கோ.வரதராஜமூர்த்தி அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்)

**கௌரவ விருந்தினர்**
திரு.பொ.இராசலிங்கம் அவர்கள்
(பவானி களஞ்சியம், நீர்வேலி)

**ஆசியுரை**
சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் அவர்கள்
(பிரதம குரு, செல்லக்கதிர்காம தேவஸ்தானம், நீர்வேலி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விழா சிறப்புற வாழ்த்துவோர் :
ASIAN FURNITURE
No.133, Power House Road, Jaffna.

பாடசாலைச் சமூகம்,
யா/நீர்வேலி சி.சி.த.க.
பாடசாலை

(சி-9046)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மனித உரிமை...

இந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவால் நடத்தப்ப டும் விசாரணைகளின் நம்பகத்தன்மை மற் றும் நேர்மை ஆகியவற்றின் மீது அரசாங் கம் தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கண்டனம் தெரிவித் திருந்தார்.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஐ.நா செய லாளர் நாயகம் பான் கீ மூனின் நிலைப்பாடு என்ன என்று நியூயோர்க்கில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை ஐ.நா செயலாளர் நாய கத்தின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் கிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இக்கேள்விக்கு பதிலளித்த அவர், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனின் கருத்துக்களை ஐ.நா செய லாளர் நாயகம் ஆதரிக்கிறார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்ற சையிட் அல் ஹுசைனின் நிலைப்பாட்டை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவ்விடயத்தில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் ஒத்துழைக் குமாறு நாம் அரசாங்கத்தை தொடர்ந்து வலி யுறுத்துவோம் என்று பதிலளித்துள்ளார்.

இதனிடையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இல ங்கை அரசாங்கத்துக்கு பொருத்தமான முறை யில் கண்டனம் தெரிவித்துள்ளதாக ஜெனிவா வுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹார்ப்பர் தெரி வித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

## யானையில்...

பிரேமதாச மற்றும் முன்னாள் பிரதம நீதி யரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் பெயர் கள் மீளவும் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (எ-11)

## இந்.படையினர்...

படையினருக்கு வழங்கப்படும் பயிற்சிகள் தொடர்பில் இராணுவத் தளபதி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாடுகளில் பயிற்சி பெறும இலங்கைப் படையினரில் 80 சதவீதத்து க்கும் மேற்பட்டோர் இந்தியாவில்தான் பயி ற்சி பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தியாவில் பயிற்சி பெறாத சுமார் 1000 வரையான அதிகாரிகள் தான் இலங்கை படைத்தரப்பில் இருப்பதாகவும் லெப்.ஜெனரல் தயா ரத்னாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## மீனவர்கள்...

இந்த மனுக்கள் சில மாதங்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் அதன் பின்னர் அவ் றின் விசாரணைத் திகதிகள் தீர்மானிக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை கடற்பகுதியில் ஹெரொயின் போதைப்பொருளை கடத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஐந்து இந்திய மீனவர்கள் மற்றும் மூன்று இலங்கையர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த 30ஆம் திகதி மரண தண்டனை விதித்திருந்தது.

இருந்தாலும், கைதுசெய்யப்படும்போது தாம இலங்கை கடற்பரப்பினுள் இருக்கவில்லை என்று வாதிடும் இந்திய மீனவர்கள், இக்குற் றச்சாட்டிலிருந்து தம்மை விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டில் கோரியுள்ளனர். (எ-11)

## பிரதி அமைச்சரின்...

கருணா அம்மான் புலிகளின் கிழக்கு இராணுவத் தளபதியாக கடமையாற்றிய காலத்தில் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை படுகொலை செய்துள் ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 175 முஸ்லிம் கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் கருணாவிற்கு தொடர்பு இருப்பதாகத் தெரி வித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரால் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டு மென கருணா கோரியுள்ளதாகவும், யுத்தக் குற றச் செயல் விசாரணைகள் கருணாவினால மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் முதல் ஆரம்பிக் கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.(எ-11)

## தேர்...

ராஜபக்ஷவின் குடு ம்ப அரசியல் பற்றிப் பேசுபவர்கள், அர் ஜுன ரணதுங்கவின் குடும்ப அரசியல் பற் றியும் பேச வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-11)

## முடியும்...

இலங்கை அரசியல் யாப்பின் 18ஆவது திருத்தத்திற்கு அமைய ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது முறையாக தான் போட்டியி டுவதில் சட்டச் சிக்கல் ஏதும் உள்ளதா என் பதில் ஆலோசனை வழங்குமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ சில நாட்களுக்கு முன் உச்சநீதி மன்றத்திடம் கேட்டிருந்தார்.

நாட்டின் தலைமை நீதிபதி உட்பட உச்ச நீதிமன்றத்தின் பத்து நீதிபதிகள், ஜனாதிபதி ராஜபக்ஷ மறுபடியும் போட்டியிடலாம் என ஏகமனதாக அறிவித்துள்ளதாக சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தவிர ஜனாதிபதி ராஜபக்ஷ தனது இரண் டாவது பதவிக்காலத்தின் நான்காம் ஆண்டு நிறைவிலேயே அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்துவதிலும் தடையொன்றும் இல்லை என நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எனவே ஜனாதிபதி மகிந்த மீண்டும் தேர்தலில் நிற்பது சம்பந்தமாக எழுப்பப்பட்ட சந்தேகங்கள் தீர்க்கப்பட்டுவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியல் யாப்பின் 18ஆவது திருத்தம் அமுலுக்கு வந்தபோது ஜனாதிபதி ராஜபக்ஷ ஏற்கெனவே தனது இரண்டாவது பதவிக் காலத்தில் இருந்தார் என்பதால் அச்சட்டத் திருத்தைப் பயன்படுத்தி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட முடியாது என முன்னாள் தலைமை நீதிபதி சரத் என்.சில்வா உட்பட எதிர்தரப்பினர் கூறிவந்த நிலையில், உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையை ஜனாதிபதி ராஜபக்ஷ கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


### மீசாலையில் காணி விற்பனைக்கு உண்டு

7 பரப்பு காணி மீசாலையில் உடனடியாக விற் பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து தரப் படும். தொடர்புகளுக்கு

0775796516, 0774561356

(சி-9042)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். பிரெஞ் ஆசிரியரிடம் சரியான உச்சரிப்போடு படிக்க, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவு செய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(8296)

- மலேசியாவில் படிக்க பகுதிநேரமாக 60,000/- வரை உழைக்க O/L மட் டும் போதும்.
- சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகள் பறக்க 100% விசா உறுதிப்பாடு.
- அனைத்து நாடுகளுக்கும் Visit visa, மறுக்கப்பட்ட விசா, Student visa ஆலோசனை.
- ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோ சனை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

(சி-9041)



### FRENCH MOVIES – JAFFNA

Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

**I, A NEGRO**

A Documentary by Jean Rouch on youth displaced in French-Speaking Africa (1958, 70 min.)

on Thursday 13 November 2014 at 4:00 p.m. at Alliance Française de Jaffna, 61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone : 0212228093

French language. English subtitles. Free entrance.

(8236)


## மரண அறிவித்தல்

### அமரர் சாமுவேல் அரியரட்ணம்

(முன்னாள் ஓய்வுபெற்ற மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்)

நவாலியைப் பிறப்பிடமாகவும் வதிரி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் அரியரட்ணம் 11.11.2014 நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவமலர் அரியரட்ணம் (முன்னாள் அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், கிறிஸ்டினா, மலினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜோய் மற்றும் டிக்ஷன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஜோர்ச் மற்றும் நவமலர் (கனடா), காலஞ் சென்றவர்களான ஜேசுதாசன், குமாரதாஸ், பரமதாஸ், சத்தியதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலை யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று மாலை 4 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தெகிவளை-கல்கிசை சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

* இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அலன் சத்தியதாஸ்
0777598061

(8293)


### காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் இரண்டு பரப்புக் காணி உடன் விற் பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:-0215616110

(8305)


### தவறவிடப்பட்டது

வரதராஜா ராஜாராம் ஆகிய எனது அடை யாள அட்டை 870873299V தவறவிடப் பட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தந்து உதவவும்.

கிழுவையடி லேன்,
இணுவில் தெற்கு, இணுவில். 0765392379

(8304)


THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக

2880 DPI



Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)

NEW Photo Quality Printing

Jana Digital 0770731654

Photo Quality 40/=

Normal Quality 35/=

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=

3 வருட உத்தரவாதம்

Sticker Print 70/=
Backlit Print 70/=

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங் | மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம். 021 221 3233, 077 073 1654

(சி-9043)

### பங்கு முதலீட்டில் ஆர்வமுள்ளவர்களுக்கான பயிற்சிப் பட்டறை

பதிவுக் கட்டணம் ரூபா 500

- ★ பங்கு முதலீடுகள் அறிமுகம்
- ★ நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்
- ★ பங்குகளைத் தெரிவு செய்தல்
- ★ முதலீட்டை ஆரம்பித்தல்

2014 நவம்பர் 15, 22ஆம் திகதி சனிக்கிழமைகளில் (மு.ப. 9.30 - 4.30 வரை)

பங்குப் பரிவர்த்தனை கேட்போர் கூடம்

147- 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுகளுக்கு: 021 222 1455 / 077 782 2014 / www.cse.lk

CSE COLOMBO STOCK EXCHANGE

(சி-9047)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.